


නාවෙළි NAAVELI
# நாவெளி
பிரதேச செயலக மாதாந்த மின்னிதழ்
ප්‍රාදේශීය ලේකම් මාසික ඉ - සඟරාව
DIVISIONAL SECRETARIAT MONTHLY E- MAGAZINE




www.navithanveli.ds.gov.lk moha.divi.navithanveli@gmail.com DSNavithanveli 0755424333

மலர்: 10 ✦ இதழ்: 21 ✦ 2024ஆம் வருடம் ஐப்பசி மாதம் இருபத்தைந்தாம் திகதி

## நாவிதன்வெளி பிரதேச செயலக வாணி விழா நிகழ்வு



நாவிதன்வெளி பிரதேச செயலக கலாசார பிரிவு ஏற்பாடு செய்திருந்த வாணி விழா நிகழ்வுகள் பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் 2024 ஒக்டோபர் 11ஆந் திகதியன்று நாவிதன்வெளி கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

நாவிதன்வெளி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திரு. பே. பிரணவரூபன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. தி. கிருபைராஜா, சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திரு. செ. சிவம், நிருவாக கிராம உத்தியோகத்தர் திரு. மனோஜ் இந்ரஜித் ஆகிய தொடர் 08ஆம் பக்கம்...

## சிறுவர் தின கலை கலாசார நிகழ்வு



நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் சிறுவர், பெண்கள் அபிவிருத்தி பிரிவினால் சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட சிறுவர்களுக்கான கலை, கலாசார நிகழ்வானது நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் 2024 ஒக்டோபர் 01ஆந் திகதியன்று நாவிதன்வெளி கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பாடசாலை மாண வர்கள், முன்பள்ளிப் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்ட இந் நிகழ்வின் அதிதிகளாக நாவிதன் வெளி பிரதேச செயலக சமுர்த்தி தலைமையக தொடர் 08ஆம் பக்கம்...

## குடிசன வீட்டு வசதிகள் தொகைமதிப்பு கடமைகள் உத்தியோக பூர்வமாக ஆரம்பம்



நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நாவிதன்வெளி-2 கிராம உத்தியோகத்தர் பிரிவில் குடிசன வீட்டு வசதிகள் தொகைமதிப்பு கடமைகள் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களினால் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப் பட்டது. இதற்கு சமமாக, இத் தொகை மதிப்பீட்டுக் கடமைகளானது ஏனைய 19 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் ஆரம்பித்து வைக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

தொடர் 19ஆம் பக்கம்...

## அங்கவீனமுற்ற பயனாளிகளுக்கான கொடுப்பனவு வழங்கல்

நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 20 கிராமப் பிரிவு களில் வாழும் அங்கவீன, மற்றும் சிறுநீரகம் பாதிப்புற்ற, நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு தொகுதி பொதுமக்களுக்கான கொடுப்பனவு வழங்கி வைக்கப்பட்டமையினைத் தொடர்ந்து மக்களின் அவல நிலை



சற்றுத் தணிந்துள்ளமை வரவேற்கத் தக்கதாக அமைந்துள்ளது. அந்த வகையில், மகளிர், சிறுவர் அலுவல் கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின்

தொடர் 08ஆம் பக்கம்...

## ஆசிரியரிடமிருந்து...

நாவெளி மலர் - 10 இல் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் அளவற்ற மகிழ்ச்சி. நாலா பக்கங்களும் பரந்து கிடக்கின்ற பல்வேறு செய்திகள், மற்றும் பல்சுவை அம்சங்களைத் தாங்கிய வகையில் நாவெளி மலர் - 10 இம்மாதமும் உங்களுக்காக வெளிவருகின்றமை மகிழ்வளிக்கின்றது. இத்தகைய மகிழ்வினைத் தந்து கொண்டிருக்கும் “நாவெளி” வாசகர்களுக்கும், ஆக்கங்களை வழங்கிக் கொண்டிருக் கும் நிருபர்கள், மற்றும் எழுத்தாளர் களுக்கும் இதயம் கனிந்த நன்றிகளும், பாராட்டுகளும் உரித்தாகட்டும். மேலும், நாவிதன்வெளிப் பிரதேசத் தின் பரந்துபட்ட பார்வைப் பரப்புக்குள் இருந்து வெளிவருகின்ற “நாவெளி” மின்னிதழ் சஞ்சிகை உங்களை மேலும் மகிழ்விக்கும் என நம்பி தொடர்கின்றேன்.

“விட்டு விடுதலையாகி ஒரு சிட்டுக் குருவியைப் போல” என்ற பாரதியார் பாடல் உங்களுக்குத் தெரிந்திருக்கும். சுதந்திரமாய்ப் பறக்கும் சிட்டுக் குருவி சிலிர்ப்பின் அடையாளம். எப்போதேனும் சிட்டுக் குருவியின் கூட்டைப் பற்றி சிந்தித்துப் பார்த்து இருக்கின்றீர்களா? நேரம் கிடைக்கும் போது கவனித்துப் பாருங்கள் சிட்டு குருவிகளின் கூடுகள் எப்படி இருக்கின்றன என்று. கடந்த ஆண்டு எப்படி இருந்தன? கடந்த நூற்றாண்டில் எப்படி இருந்தன? வியப்பூட்டும் பதில் என்னவென்றால் பல நூற்றாண்டுகளாக இவற்றில் ஏதும் மாற்றம் இல்லை என்பதே. விலங்குகள், பறவைகள் போன்றவையெல்லாம் வாழ்க்கை முறைகளில் மாற்றங்களைக் கொண்டு வருவதில்லை. இயற்கையும் அவ்வாறே அமைந்து விடுகின்றது.

ஆனால், மனிதனுடைய வாழ்க்கையோ மாற்றங்களால் கட்டமைக்கப்பட்டது மட்டுமல்ல, மாற்றங்களால் நிறைந்தது. அந்த மாற்றங்கள் தான் அவர்களுடைய வாழ்க்கையில் பல்வேறு வளர்ச்சிகளைக் கொண்டு வருகின்றது. சிலருக்கு மாற்றங்கள் எதுவும் பிடிப்பதில்லை.

கோயில் திருவிழாக்களில் விற்கும் விளையாட்டு Telescope பார்த்திருப்பீர்கள். அதனை கண்ணில் வைத்துப் பார்க்கும் போது பிரமாண்டமான காட்சிகள் விரிவடைந்து நம்மை வியப்பூட்டும். மாற்றமும் அத்தகையதே. ஒரு சின்ன மாற்றம் கூட நம் கண்ணில் மிகப்பெரிய வேறுபாட்டைக் காட்டக்கூடும். எனவே, மாற்றங்களைக் குறித்து மலையளவு கற்பனைகள் வளர்க்காமல், அதன் இயல்பிலேயே அணுகுவது சிறந்தது எனக் கருதுகின்றேன்.

முன்னேற்றத்துக்கான மாற்றங்களை விரும்பும் மனம் Positive மனநிலையில் இருந்தே புறப்படுகின்றது. எத்தனை முறை மாற்றத்தைக் குறித்து நேர்மறையாகச் சிந்திக்கிறோம்? எத்தனை முறை எதிர்மறையாகச் சிந்திக்கிறோம் என்பதைக் கணக்கிட்டுப் பாருங்கள். நீங்கள் வெற்றியாளரா, இல்லையா என்பது புரிய வரும்.

துணிச்சலுக்கும் முட்டாள் தனத்துக்கும் வேறுபாடு உண்டு. இதை விமானத்திலிருந்து பரசூட்டுடன் குதிப்பதற்கும், எதையும் யோசிக்காமல் குதிப்பதற்குமான வித்தியாசமாய்க் கொள்ள முடியும்.

எனவே, மாற்றத்தை நோக்கி இடம் பெயரும் முன் குறித்த புரிதலும், அறிதலும் இருக்க வேண்டியது அவசியம். அதன் பின் மாற்றத்தை ஏற்றுக் கொள்ள முதல் சுவடை எடுத்து வைக்கும் போதே இதன் முழுப் பொறுப்பும் என்னுடையது என்பதை மனதில் எழுதுங்கள். அது மாற்றத்தை வெற்றிகரமாக மாற்றும் உத்வேகத்தைத் தரும்.

*“மாற்றங்களை எதிர் கொள்வோம் வாழ்வினிலே இனி வெல்வோம்.”*

என்றும் அன்புடன்
ஆசிரியர்



## வாழ்கைத் தத்துவங்கள்

*01. உனது தந்தையின் அன்பை நீ பாதுக்காத்து கொள். அதை முறித்து விடாதே. அவ்வாறு அதை முறித்துக் கொண்டால் இறைவன் உனது ஒளியை போக்கி விடுவான்.*

*02. தன் பக்கத்தில் இருக்கும் அண்டை வீட்டார் பசித்திருக்க தான் மட்டும் வயிறார உண்பவர் ஓர் இறை நம்பிக்கையாளராய் இருக்க முடியாது.*

*03. பசித்தவன் ஒருவனுக்கு வயிறு நிறைய நீ உணவளிப்பது மிகச்சிறந்த தர்மமாகும்.*

*04. அதிகம் பேசாதவனை உலகம் அதிகம் விரும்புகிறது. அளந்து பேசுபவனை அதிகம் மதிக்கிறது. அதிகம் செயற்படுபவனையே கை கூப்பித் தொழுகிறது.*

*05. உங்கள் எண்ணம் பண்பட்டு இருந்தால் உங்களுக்கு கெட்ட எண்ணங்களே தோன்றாது. இதனால் உங்கள் சொல்லும் செயலும் தன்னாலேயே பண்பட்டு விடும். இதனால் உங்கள் எண்ணங்களின் மேல் அதிக கவனம் செலுத்த வேண்டியது இன்றியமையாதது.*

*06. உருவத்தில் எப்படி இருந்தாலும் உள்ளத்தில் குழந்தையாய் இரு இந்த உலகமே உன்னை நேசிக்கும்.*

*07. நமது சொல் அல்லது செயலுக்கு மூல காரணியாக இருப்பது நம் எண்ணமே. நாம் எதையும் சொல்ல முன்போ அல்லது எதையும் செய்ய முன்போ அதற்கான உந்துதல் முதலில் நம் எண்ணத்தில் தான் உருவாகிறது.*

# 2024ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர்களினால் கிராமங்களின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு தொடர்பான ஓர் பார்வை

திட்டமிடல் பிரிவு - பிரதேச செயலகம், நாவிதன்வெளி.

2024ஆம் ஆண்டு எமது நாவிதன்வெளி பிரதேச செயலகத்திற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் 22.905 மில்லியன் ரூபா நிதியும் ஜனாதிபதியின் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் 29.72 மில்லியனும் ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றுள்ளது. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் களான கௌரவ எஸ்.எம்.எம். முஸாரப் அவர்களிடமிருந்து 3.4 மில்லியன் ரூபா நிதியும், கௌரவ விமலவீர திஸாநாயக அவர்களிடமிருந்து 0.7 மில்லியன் ரூபா நிதியும், கௌரவ டபிள்யு.டி.வீரசிங்க அவர்களிடமிருந்து 0.3 மில்லியன் ரூபா நிதியும், கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ் அவர்களிடமிருந்து 3.41 மில்லியன் ரூபா நிதியும், கௌரவ த. கலைஅரசன் அவர்களிடமிருந்து 11.145 மில்லியன் ரூபா நிதியும், கௌரவ பைஸல் ஹாஸிம் அவர்களிடமிருந்து 3.95 மில்லியன் ரூபா நிதியும் கிடைக்கப் பெற்றுள்ளது மற்றும் ஜனாதிபதியின் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் கௌரவ எஸ்.எம்.எம். முஸாரப் அவர்களிடமிருந்து 11.8 மில்லியன் ரூபா நிதியும், கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ் அவர்களிடமிருந்து 16.72 மில்லியன் ரூபா நிதியும், கௌரவ த. கலைஅரசன் அவர்களிடமிருந்து 1.2 மில்லியன் நிதியும் ரூபா கிடைக்கப் பெற்றது. மொத்தமாக 113 திட்டங்கள் 19 கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள மக்களுக்கு



நடைமுறைப்படுத்தப்பட்டன. ஒரு கிராமத்திற்கு மட்டும் எந்தவிதமான நிதியும் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பாடசாலைகளுக்கு உபகரணங்கள் கொள்வனவு செய்தல் மற்றும் பாடசாலை உட்கட்டமைப்பு அபிவிருத்தி, வணக்க ஸ்தலங்களுக்கு பொருட்கள் கொள்வனவு செய்தல் மற்றும் வணக்க ஸ்தல அபிவிருத்தி, பொது மயான அபிவிருத்தி, முன்பள்ளி பாலர் பாடசாலைகளுக்கு பொருட்கள் கொள்வனவு செய்தல் மற்றும் அபிவிருத்தி, கிராம அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் மாதர் சங்கங்களுக்கு பொருட்கள் கொள்வனவு செய்தல் மற்றும் அபிவிருத்தி, வீதியோர மின் விளக்குகள் பொருத்துதல், விளையாட்டு கழகங்கள் மற்றும் இளைஞர் கழகங்களுக்கு பொருட்கள் கொள்வனவு செய்தல் போன்றவற்றுக் காக இந்நிதியானது பயன்படுத்தப் பட்டது.

## நாவிதன்வெளிப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியான நிதி ஒதுக்கீடு

| தொ.இல | கி.உ. பிரிவு | மொத்த ஒதுக்கீடு (ரூபா.) | விகிதாசாரம் (%) | இனம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | தமிழ் | முஸ்லிம் | சிங்களம் |
| 1 | சாளம்பைக்கேணி-01 | 10230000.00 | 19.95 | 0% | 100% | 0% |
| 2 | சாளம்பைக்கேணி-02 | 5595000.00 | 10.91 | 8.42% | 92% | 0% |
| 3 | சாளம்பைக்கேணி-03 | 11435000.00 | 22.3 | 0% | 100% | 0% |
| 4 | சாளம்பைக்கேணி-04 | 3515000.00 | 6.86 | 1.64% | 98.36% | 0% |
| 5 | சாளம்பைக்கேணி-05 | 1615000.00 | 3.15 | 0.27% | 99.73% | 0% |
| 6 | மத்தியமுகாம்-01 | 2805000.00 | 5.47 | 57.81% | 42.19% | 0% |
| 7 | மத்தியமுகாம்-02 | 100000.00 | 0.20 | 76.91% | 21.97% | 1.12% |
| 8 | மத்தியமுகாம்-03 | 4725000.00 | 9.22 | 34.67% | 60.85% | 4.48% |
| 9 | மத்தியமுகாம்-04 | .- | .- | 100% | 0% | 0% |
| 10 | மத்தியமுகாம்-05 | 1900000.00 | 3.71 | 100% | 0% | 0% |
| 11 | மத்தியமுகாம்-06 | 500000.00 | 0.98 | 100% | 0% | 0% |
| 12 | சொறிக்கல்முனை-01 | 1150000.00 | 2.24 | 100% | 0% | 0% |
| 13 | சொறிக்கல்முனை-02 | 480000.00 | 0.94 | 99.86% | 0.14% | 0% |
| 14 | சொறிக்கல்முனை-03 | 510000.00 | 0.99 | 85.84% | 14.16% | 0% |
| 15 | சவளக்கடை | 200000.00 | 0.39 | 98.97% | 1.03% | 0% |
| 16 | நாவிதன்வெளி-01 | 700000.00 | 1.37 | 100% | 0% | 0% |
| 17 | நாவிதன்வெளி-02 | 2650000.00 | 5.17 | 100% | 0% | 0% |
| 18 | அன்னமலை-01 | 200000.00 | 0.39 | 100% | 0% | 0% |
| 19 | அன்னமலை-02 | 2465000.00 | 4.81 | 100% | 0% | 0% |
| 20 | அன்னமலை-03 | 500000.00 | 0.98 | 100% | 0% | 0% |
| | மொத்தம் | 51,275,000.00 | 100 | | | |

# அமெரிக்க அதிபர் தேர்தல்: இன்னும் சில நாட்களில்... கமலா ஹாரிஸுக்கு காத்திருக்கும் சிக்கல்கள்?

P.RUPAN - DEVELOPMENT OFFICER

அமெரிக்க அதிபர் தேர்தல் நடைபெற சில நாட்கள் உள்ள நிலையில் கமலா ஹாரிஸுக்கு உள்ள சிக்கல்கள் அவரது வெற்றி வாய்ப்பைத் தட்டிப் பறிக்கலாம் எனக் கூறப்படுகிறது. அமெரிக்காவின் புதிய அதிபரை தேர்வு செய்யும் தேர்தல் வருகிற நவம்பர் 5ஆம் திகதி நடைபெறுகிறது. இந்த தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து ஜோ பைடன் விலகினார். இதையடுத்து ஜனநாயக கட்சி சார்பில் இந்திய வம்சாவளியான கமலா ஹாரிஸ் போட்டியில் இறங்கினார். அவரை எதிர்த்து குடியரசு கட்சி தரப்பில் முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் போட்டியிடுகிறார். இவர்கள் இருவருக்கும் இடையே கடுமையான பிரச்சாரம் நடைபெற்று வருகிறது. பிரச்சார மேடைகளில் இருவரும் ஒருவரை ஒருவர் கடுமையாக தாக்கிப் பேசி வருகின்றனர். அண்மையில்



அமெரிக்காவின் தனியார் தொலைக் காட்சி நிறுவனங்கள் வெளியிட்ட கருத்துக்கணிப்புகளில் கமலா ஹாரிஸ் தான் அதிபராக தேர்வு செய்யப் படுவார் என கூறப்படுகிறது. இதனால் டிரம்ப் தனது பிரச்சார முறைகளில் சில மாற்றங்களை செய்துள்ளார்.

கடந்த செப்டம்பர் மாதம் 10ஆம் திகதி கமலா ஹாரிஸ் மற்றும் டிரம்ப் இடையே முதல் நேரடி விவாதம் நடைபெற்றது. அப்போது ஒருவர் மீது ஒருவர் குற்றச்சாட்டுகளை அடுக்கினர். கருக்கலைப்புச் சட்டம், சட்டவிரோத குடியேற்றம் போன்றவை தொடர்பாக விவாதங்கள் நடந்தன. இதையடுத்து மற்றொரு நேரடி விவாதத்திற்கு கமலா ஹாரிஸ் அழைப்பு விடுத்து இருந்தார். ஆனால் டொனால்ட் டிரம்ப் இதற்கு மறுப்பு தெரிவித்தார்.

இந்த நேரடி விவாதத்திற்கு பிறகு கமலா ஹாரிஸுக்கு ஆதரவு மேலும் அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது. எனினும் சில மாகாணங்களில் டிரம்பிற்கு ஆதரவு பெருகி உள்ளதாக கூறப்படுகிறது. இந்த நிலையில் அமெரிக்க அதிபர் தேர்தல் நடப்பதற்கு சில நாட்களே மீதமுள்ள நிலையில் அரசியல் களம் சூடுபிடிக்க தொடங்கி உள்ளது.

## ஹமாஸின் முக்கிய தலைவர் கொல்லப்பட்டார்! உறுதிப்படுத்திய இஸ்ரேல்



ஹமாஸ் தலைவர் யஹ்யா சின்வார் கொல்லப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவம் உறுதிப்படுத்தியுள்ளது. கட்டிட இடிபாடு ஒன்றில் சின்வாரின் உடல் இருப்பதை இஸ்ரேலிய இராணுவத்தின் ஆளில்லா விமானம் ஒன்று (17.10.2024) கண்டுபிடித்துள்ளது. கடந்த புதன்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலிலேயே சின்வார் கொல்லப் பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மரபணு சோதனை மற்றும் பல மாதிரிகளை பயன்படுத்தி சின்வார் கொல்லப்பட்டதை இஸ்ரேலிய இராணுவம் உறுதி செய்துள்ளது. யஹ்யா சின்வார் கடந்த வருடம் ஒக்டோபர் 7 அன்று இஸ்ரேலில் இடம்பெற்ற தாக்குதலின் முக்கிய பின்புலமாக செயற்பட்டவர் ஆவார். இந்நிலையில், இது ஒரு ஆரம்பம் மட்டுமே என சுட்டிக்காட்டியுள்ள இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இஸ்ரேலியர்களை சிறைப்பிடித்து வைத்திருக்கும் ஹமாஸ் தீவிரவாதிகள் ஆயுதங்களை கீழே போடும் படியும் வலியுறுத்தியுள்ளார். மேலும் பணயக்கைதிகளாக உள்ள இஸ்ரேலியர்களை திருப்பி அனுப்பு பவர்களுக்கு வெளியே சென்று வாழ்வதற்கு இடம் வழங்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

## ஈரானுக்கு எதிரான தாக்குதல் திட்டம் தொடர்பில் கசிந்த அதி முக்கிய ஆவணம்

ஈரானுக்கு எதிராக பழிவாங்கும் இஸ்ரேலின் திட்டங்களைப் பற்றிய மிகவும் இரகசியமான அமெரிக்க உளவுத்துறையின் ஆவணங்கள் கசிந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இது தொடர்பில் அமெரிக்கா தீவிர விசாரணை நடத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. ஒக்டோபர் 15 மற்றும் 16 திகதியிடப்பட்ட ஆவணங்கள் "மிடில் ஈஸ்ட் ஸ்பெக் டேட்டர்" என்ற கணக்கு மூலம் டெலிகிராமில் வெளியிடப்பட்ட பின்னர் அவை இணையத்தில் கசிய ஆரம்பித்துள்ளன. இவை மிகவும் இரகசியமாக பாதுகாக்கப்பட வேண்டியவை எனவும் அவை அமெரிக்கா மற்றும் அதன் "ஐந்து கண்கள்" எனப்படும் பங்காளி நாடுகளான அவுஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து மற்றும் பிரித்தானியா ஆகியவற்றால் மட்டுமே பார்க்கப்பட வேண்டும் என்பதைக் குறிக்கும் அடையாளங்களைக் கொண்டவை எனவும் தெரிவிக்கப்படுகிறது. ஈரானுக்கு எதிரான தாக்குதலுக்கு இஸ்ரேல் செய்யவுள்ள திட்டங்களை இந்த ஆவணங்கள் விவரிக்கின்றன.

# நிழலின் அருமை

## சிறுகதை



வாஞ்சி சகி

"நீயெல்லாம் இருந்தும் என்ன பயன்... வீட்டில் எந்தவொரு வேலையும் செய்யாமல் காலத்தை ஓட்டுவதை விட எங்கேயாவது தொலைந்து போ..." என்று சாந்தன் தன் மனைவியை கோபமாக தினமும் உரத்து பேசி வருகின்றான். திருமணம் செய்து எட்டு வருடங்களே தான் ஆகியிருந்தன. கிறிஜாவிற்கும் சாந்தனுக்கும் இடையே கடுமையான சண்டை வாக்குவாதம் முற்றி விட்டது.

ஒரு நாள் காலை வேலைக்கு சற்று அவசர அவசரமாக வெளிக்கிட்டு கொண்டிருக்கையில் மனைவி கிறிஜா மதிய உணவை நீட்டினாள் அதை வாங்கிய கையோடு தரையில் கொட்டி நீயும் உன்ர சாப்பாடும் என்று மதம் பிடித்த யானையை போல் மனைவியை சினந்து கொண்டு திட்டிய படியே அன்று வேலைக்குச் சென்றான்.

இத்தனைக்கும் இருவரும் காதல் மணம் புரிந்தவர்கள். ஒருவருக் கொருவர் விட்டுக் கொடுத்து செல்லக் கூடியவர்கள்தான். கணவனின் புரிந்துணர்வு அற்ற தன்மை அப்படி நடக்க வைத்து விட்டது. வீட்டில் நடக்க இருக்கும் விபரீதம் புரியாமல் அவன் வேலையில் ஆழ்ந்து விட்டான். மாலையில் வீடு திரும்பிய போது தெருவில் இருக்கும் சிறுவர்கள் வீட்டு வாசலில் அமர்ந்து கொண்டு மண்ணைக் கொட்டி விளையாடிக் கொண்டிருந்தனர். வீட்டுக் கதவு 'ஆ' வென திறந்து கிடந்தது. வீட்டில் இருக்கும் நாய்க் கூண்டு காலியாக இருந்தது.

திகைப்போடு வீட்டுக்குள் நுழைந்தால், கலபரம் நிகழ்ந்ததற்கான அறிகுறிகள் தென்பட்டன. தொலைக்காட்சியில் கார்ட்டூன் நிகழ்ச்சி சத்தமாக அலறிக் கொண்டிருந்தது. விளக்கு ஒன்று கீழே தள்ளி விடப்பட்டிருந்தது. தரை விரிப்பு ஒரு சுவரின் அருகே ஒழுங்கின்றி சுருண்டு கிடந்தது. அறை முழுவதிலும் விளையாட்டு பொம்மைகளும் பல்வேறுபட்ட துணிகளும் நிறைந்து கிடந்தன. சமையலறைக்குள் மெதுவாக எட்டிப் பார்த்தான். சாமான் கழுவும் தொட்டியில் பாத்திரங்கள் நிறைந் திருந்தன. சமையல் தட்டில் காலைச் சிற்றுண்டி சிந்திக் கிடந்தது.

குளிரூட்டி பெட்டியின் கதவு அகலமாகத் திறந்திருந்தது. அதில் இருந்த மிஞ்சிய உணவு தரையில் சிந்தியிருந்தது. மேசையின் அடியில் ஓர் கண்ணாடி குவளை உடைந்து கிடந்தது. மதிய உணவு வேளைக்கு முன்பே தன் மனைவிக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்று உள்மனம் சொன்னது. கணவருக்குப் படபடப்பு அதிகமானது.

வீட்டினுள் இருந்த குளியலறையை நோக்கித் திரும்ப, அங்கும் அதிர்ச்சிக் காட்சிகள். உள்ளே தண்ணீர் வடியும் சப்தம், நிசப்தத்தை மேலும் திகிலாக்கியது. கதவைத் தாண்டி வெளியே வந்து தண்ணீர் குளத்தைப் போல தேங்கிக் கிடந்தது. மைல் கணக்கில் நீளமான சுத்தம் செய்யும் காகிதம் குளியலறையில் இருந்து சமையலறை வரை நீண்டு கிடந்தது. கண்ணாடியின் மீதும் சுவர்கள் மீதும் பற்பசை பூசப் பட்டிருந்தது.

'அப்பா...' என்ற குரல் உரத்து கேட்டு, திடுக்கிட்ட அவன் தனது இரண்டு வயது மகன் அறுந்த முத்து மாலையின் மணிகளோடு விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டு அவனருகில் விரைந்து சென்று தூக்கி இறுக அணைத்து முத்தம் கொடுத்தான்.

கண்களில் நீர் பொங்கியது. மனைவிக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்திருக்குமோ என்ற பீதியுடன் அவளைத் தேடினான்.

படுக்கையறையை நோக்கிப் பார்வை திரும்ப, அவசரமாக அதன் கதவைத் திறந்தான். உள்ளே முதுகுக்கு தலையணையை வைத்து, ஒய்யாரமாக சாய்ந்திருந்த அவனது மனைவி ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருப்பதைக் கண்டு, மனைவியை அழைத்தான். உலர்ந்த நாக்குடன், அவரைப் பார்த்து புன்னகை புரிந்த மனைவி, "எப்போ வந்தீங்க" என்று கேட்டாள்.

அதிர்ச்சியிலிருந்து மீளாத கணவர், "இன்று வீட்டில் என்னதான் நடந்தது?" என்று கேட்டு பதட்டத்துடன் மனைவியின் பதிலை எதிர்பார்த்திருந்தான்.

மறுபடியும் சிரித்த மனைவி, "வீட்டிலே என்னதான் வெட்டி முறிச்சியோ.. என்று அலுவலகம் முடிந்து வந்தவுடன் நீங்கள் கேட்பது வழக்கம். இன்று ஒன்றும் வெட்டி முறிக்கவில்லை! அதனால்தான் இப்படி நடந்திருக்கிறது" என்று கூறினாள்.

முற்றும்.

# பனை - ஒரு அறிவியல் ஆய்வு






**ப**னை, புல்லினத்தைச் சேர்ந்த ஒரு தாவரப் பேரினம். அறிவியல் வகைப் பாட்டில் இதை **Borassus** என்னும் பேரினத்தில் அடக்குவர். நாங்கள் கற்பகதரு என்று அழைப்போம். இந்த பேரினத்தில் பல சிற்றினங்கள் அடங்குகின்றன. நெடிய மரமாக 30 மீட்டர் உயரம் வரை பனைமரம் வளரும். பொது வழக்கில் மரம் என்று தமிழில் வழங்கப்படினும், இது மர வகையைச் சார்ந்தது அல்ல.

தற்காலத் தாவரவியல் அடிப்படையில் மட்டுமன்றித் தமிழ் இலக்கண மரபுகளின் படியும் பனையை மரம் என்று குறுப்பிடுவது தவறு. நெடிய மரமாக 30 மீட்டர் உயரம் வரை பனை மரம் வளரும். இலைகள் நீட்டமாக விசிறி போல் இருக்கும். இலைகள் 2-3 மீட்டர் நீளம் இருக்கும். பூக்கள் சிறியவை. பழங்கள் (நுங்கு) பெரியதாக, வட்டமாக, பழுப்பு நிறத்துடன் இருக்கும். பனையை, கேட்டதைக் கொடுக்கும் தேவலோகத்து மரம் எனத் தொன்மங்கள் கூறும் கற்பகதருவுக்கு ஒப்பிடுவர். பனை மரத்தில் இருந்து கிடைக்கும் நுங்கு நீரை தொடர்ந்து சாப்பிட்டு வர கோடை காலத்தில் ஏற்படும் வேர்குரு நீங்கும். தோலுடன் நுங்கை சாப்பிட்டு வர சீதக்கழிச்சல் நீங்கும். பனங்கற்கண்டை ஏதாவது ஒரு வகையில் அடிக்கடி பயன்படுத்தி வர அம்மை நோயால் ஏற்பட்ட உடல் வெப்பம் தாகம் போன்றவை நீங்கும். பனங்கிழங்கிற்கு உடல் குளிர்ச்சியை தரும் தன்மை உண்டு. இந்தக் கிழங்கை சாப்பிட்டு வந்தால் உடல் அழகு பெறும். உடல் பலமும் அதிகரிக்கும். பனை மரத்தில் நுங்கு பிஞ்சு உருவானதும், அதில் நாரைக் கட்டி, வளர்ச்சியை கட்டுப்படுத்த பிஞ்சு ஓரத்தில் லேசாக கீறிவிட்டு, தினமும் மூன்று முறை மரம் ஏறி, அந்த பிஞ்சை அழுத்த, சொட்டுச் சொட்டாக மண்பானையில் பால் (கள்) இறங்கும். இப்படி ஒரு மரத்தில் மூன்று மாதம் வரை பால் எடுக்கலாம். அந்த பாலில் சுண்ணாம்பு சேர்த்தால் பதநீர் தயார். சில இடங்களில் மண்பானை அடியில் சுண்ணாம்பை தடவி கட்டிவிடுவார்கள்.

இதனால் மரத்திலிருந்து பானையை இறக்கும் போதே பதநீர் தயாராக இருக்கும். இந்த பதநீரில் சோறு சமைக்கலாம், பொங்கல் வைக்கலாம் ,கொழுக்கட்டை தயாரிக்கலாம் அவியல், அரிசி படைக்கலாம். பிஞ்சிலிருந்து மரமாகி, கீழே விழும்வரை எல்லா வகையிலும் பயன்தரும் என்பது நிதர்சனம். தேக நோய் இருப்பவர்கள் பதநீரை 40 நாட்கள் இடைவிடாது அருந்தி வர அந்த நோய் பாதிப்பில் இருந்து விடுபடலாம். பதநீரில் இருந்து எடுக்கப்படும் கருப்பட்டி, பனங்கற்கண்டு ஆகியவற்றுக்கும் நோய் தீர்க்கும் குணங்கள் உண்டு. பனை நுங்கு கோடை காலத்தில் ஏற்படும் தாகத்திற்கு மிகவும் ஏற்றது. பனங்கிழங்கை உலர்த்தி இடித்து மாவாக்கி அதனுடன் தேங்காய், உப்பு போட்டு சாப்பிட்டு வர உடலுக்கு பலம் உண்டாகும். மேலும் உடல் பருமன் ஆகும். பனம் பூவை சுட்டு சாம்பலாக்கி அதில் சிறிது தேங்காய் எண்ணெய் கலந்து புண்களின் மீது பூச ஆறும். பயன் தரும் பாகங்கள் நுங்கு, பனம்பழம், பனங்கிழங்கு, பனை ஓலை, குருத்து, பனை கருக்கு, பனைப்பால், முற்றிய மரம் முதலியன. பனை உடலுக்கு ஊட்டத்தை அளிப்பது, குளிர்ச்சி தருவது, வெப்பத்தைத் தணிப்பது, துவர்ப்பும் இனிப்பும் கலந்த சுவை உடையது. பனை மரத்தின் பால் தெளுவு(தெளிவு) எனப்படும். சுண்ணாம்பு கலக்காதது கள் எனப்படும். வைகறை விடியல் இந்தப் பாலை 100 தொடக்கம் 200 மி.லீ அருந்தி வந்தால் போதும் உடல் குளிர்ச்சி பெறும், ஊட்டம் பெறும். வயிற்றுப்புண் நிச்சயம் ஆறிவிடும். புளிப்பேறிய கள் மயக்கம் தரும், அறிவை மயக்கும் ஆனால் உடல் நலத்தைக் கொடுக்கும். சுண்ணாம்பு சேர்த்த தெளுவு எல்லோருக்கும் சிறந்த சுவையான சத்தான குடிநீராகும். அதைக் காய்ச்சினால் இனிப்பான கருப்பட்டி கிடைக்கும்.

நுங்கு வெயிலின் கொடுமையைக் குறைக்க மனிதனுக்குக் கிடைத்த அரு மருந்தாகும். எல்லா வயதினருக்கும் ஏற்ற சிறந்த சத்துணவாகும். நுங்கின் நீரை வேர்க்குருவிற்குத் தடவ குணமாகும். பனம்பழம் சிறந்த சத்துணவாகும். உயிர் சத்து நிறைந்தது. சுட்டுச் சாப்பிடலாம்.

# *Android: APK Mod* செயலிகளுக்குத் தடை; இனி பிளேஸ்டோரில் மட்டும்தான் செயலிகளைப் பதிவிறக்க முடியுமா?

ICT UNIT - DIVISIONAL SECRETARIAT, NAVITHANVELI

**Smart Phone** பயன்படுத்தும் பலரும் பல காரணங்களுக்காகக் **Google Play Store** இல்லாமல், பிற தளங்களிலிருந்து செயலிகளை **(Apps)** தரவிறக்கம் செய்து **Install** செய்து பயன்படுத்துகின்றனர்.

இப்படி தரவிறக்கம் செய்வதை **Side Loading** என்கின்றானர். இந்த செயலிகள் **Mod version** என அழைக்கப்படுகின்றன.

உதாரணமாக ஸ்பாட்டிஃபை **(Spotify)** செயலியில் பணம் கட்டாமல், அதன் **Premium Version** னை ஏதாவது ஒரு தளத்தில் தரவிறக்கம் செய்து பயன்படுத்துகின்றனர். அவ்வகையில், **WhatsApp-ல் GT WhatsApp, Yt WhatsApp** என விதவிதமான பதிப்புக்கள் பயன்பாட்டிலிருந்தன. இவை **.apk Format** இல் இருக்கும்.

**APK mod Version**களை உருவாக்குவது சில சமயங்களில் சட்டவிரோதமும் கூட. இதனைத் தடுக்க புதிய முயற்சியை மேற்கொள்கிறது கூகுள் நிறுவனம்.

கூகுள் பிளேஸ்டோரின் **Integrity API-ல்** கொண்டுவரும் மாற்றங்கள் மூலம் இதைச் சாத்தியப்படுத்த உள்ளனர். கடந்த மே மாதம் நடந்த கூகுளின் **I/O** மாநாட்டில் சோதனை முயற்சியில் இதைச் செயல்படுத்தியிருக்கின்றனர். **Side Load** செய்யப்பட்ட செயலிகளானது, **"இந்த** செயலியை **Play Store** இல் இருந்து தரவிறக்கவும் **(Get this app from play store)"** என **Notification** அனுப்புவதுடன்,



**Side Load** செய்யப்பட்ட செயலியைச் செயல்படாமல் நிறுத்தப்படுவதையும் உறுதி செய்திருக்கின்றனர்.

கூகுளின் இந்த நடவடிக்கையால் சோதனை முயற்சியில் இருக்கும் செயலிகள், கட்டமைக்கப்பட்டு வரும் செயலிகள், **Play Store**ல் இருந்து **Expiry** ஆன, **Developer**களால் கைவிடப்பட்ட செயலிகள் சிலவும் மொபைலில் செயல்படுத்த முடியாமல் போகலாம்.

**Side loading** பலவழிகளில் நேர்மறையாகவும் உபயோகமாக இருந்து வந்துள்ளது. எனவே, சில ஆண்ட்ராய்ட் பயனர்கள் புதிய நடவடிக்கையால் அதிருப்தி அடைந்துள்ளனர். கடந்த ஆண்டு சைடுலோடிங் செய்யப்படும் செயலிகளில் **Malware Scanning** செய்யும் வசதியை அறிமுகப்படுத்தியது கூகுள். பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மை காரணங்களைக் கூறி **Side Loading** தடை செய்வதில் ஆப்பிளைப் பின்பற்றுவதாக ஆண்ட்ராய்ட் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

ஆப்பிளில் **Side Loading**க்கு வாய்ப்பே இல்லை. ஆப்பிள் ஸ்டோரில் இருக்கும் செயலிகளை மட்டுமே பயன்படுத்த முடியும். ஆனால் இந்த ஆண்டின் தொடக்கத்தில் சிலர் ஆப்பிள் **Side Loading** ஐ அனுமதிக்க வேண்டும் என அழுத்தம் கொடுத்தது குறிப்பிடத்தக்கது.

சைடுலோடிங்கை தடுக்கும் கூகுளின் இந்த நடவடிக்கை எத்தனை வீரியமாக இருக்கும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

### பிரதேச செயலக வாணி விழா ...

உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டதுடன், கும்பம் வைத்தல் மற்றும் வாணி பஜனை ஆகிய நிகழ்வுகளும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப் பட்டன.

மேலும் இந்நிகழ்வில், கமு/சது/ நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றதுடன் பங்கு பற்றிய மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டது, அத்துடன் பாடசாலை ஆசிரியர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். பிரதேச செயலாளரின் வாணி விழா சிறப்புரை மற்றும் பூஜை நிகழ்வுகளுடன் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட வசதி குறைந்த பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

### சிறுவர் தின கலை, கலாசார நிகழ்வு...

முகாமையாளர் திரு. செ. சிவம், சமுர்த்தி வங்கி முகாமையாளர் திரு. M.I.அசாத், மேலதிக மாவட்ட பதிவாளர் திரு. பு.நித்தியானந்தன், சமூக சேவை உத்தியோகத்தர் திரு. திரு. C.குணரெட்ணம், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. A.சர்மிலராஜ் மற்றும் அம்பாறை மாவட்ட செயலக கலாசார உத்தியோகத்தர் திரு. T. M. நிம்சான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

“பிள்ளைகளைப் பாதுகாப்போம், சமமாக நடத்துவோம்” எனும் இவ்வருடத்தின் தொனிப்பொருளுக்கு அமைவாக இடம்பெற்ற இந்நிகழ்வில் சிறுவர்களின் திறமைகளை வெளிக் காட்டும் வகையில் கலை கலாசார நிகழ்வுகள் இடம் பெற்றதுடன் பங்கு பற்றிய சிறுவர்களுக்கு அதிதிகளால் சான்றிதழ்களும் பரிசுப் பொருட்களும் வழங்கிவைக்கப்பட்டன.

மேலும் அவர்களை கௌரவிக்கும் முகமாக எதிர்கால இலட்சியங்கள் அச்சிடப்பட்ட ஸ்டிக்கர்களும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வுக்கான நிதி அனுசரணையை சிறுவர் நன்னடத்தை திணைக்களம், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம், கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பன வழங்கியதுடன் உபசரணை மற்றும் பரிசுப் பொருட்களை நாவிதன்வெளி -01 ஐ சேர்ந்த திரு. இ. ரூபசாந்தன் அவர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களான Dutch Lanka Friendship, UNICEF - CERI போன்றன வழங்கியிருந்தன.

### அங்கவீனமுற்ற பயனாளிகளுக்கான...

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின் ஊடாக அங்கவீனமுற்ற நபர்கள் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்காக வழங்கப் படுகின்ற ரூபா. 7500 மாதாந்த வாழ்வாதார கொடுப்பனவு பெற்றுக் கொள்வதற்காக காத்திருப்பு பட்டிய லில் இருந்து புதிதாக தெரிவு செய்யப் பட்ட 92 பயனாளிகளுக்கான கொடுப்பனவுகளை வழங்கி வைக்கும் நிகழ்வு நாவிதன்வெளி உதவிப் பிரதேச செயலாளர் திரு. பே. பிரணவரூபன் அவர்களின் தலைமையில் 2024 செப்டம்பர் 26ஆந் திகதியன்று நாவிதன்வெளியிலுள்ள “நாவெளி” கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

இதன்போது நாவிதன்வெளி பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் திரு. சீ. குணரெட்ணம் அவர்கள், சமூக சேவைப் பிரிவின் உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டு பயனாளிகளுக்கான கொடுப்பனவு களை வழங்கி வைத்தனர்.

### உளநலம் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு



நாவிதன்வெளி பிரதேச செயலக சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவினால் சர்வதேச உளநல தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான உளநலம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் 2024 ஒக்டோபர் 14ஆந் திகதியன்று பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில், நாவிதன்வெளி பிரதேச செயலக சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திரு. செ. சிவம் அவர்களும் கலந்து கொண்டார்.

“பணிபுரியுமிடத்தில் உளநலன்” எனும் தொனிப்பொருளில் இடம் பெற்ற இக்கருத்தரங்கில் நாவிதன்வெளி பிரதேச செயலக உளவளத்துணை உத்தியோகத்தர்களான திரு. ஆ. சுதர்சன், திருமதி ந.சங்கீதா ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டு உத்தியோகத்தர்களுக்கான தெளிவூட்டல்களை வழங்கினர். பிரதேச செயலக அலுவலக மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் பங்கு பற்றிய இந்நிகழ்வுக்கான அனுசரணை யை அக்கரைப்பற்று சுவாட் அமைப்பினர் வழங்கியிருந்தனர்.







# குறுக்கெழுத்துப் போட்டி இல.09 இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ச | ந் | தே | க | ம் | ■ | டு | வ |
| த் | ■ | ■ | ரி | வை | அ | ■ | ல |
| தி | தி | அ | ■ | ய | ம் | சு | பு |
| ய | கா | ம் | ■ | த் | பு | தி | ரி |
| ம் | இ | மி | ■ | தி | ■ | ■ | ம் |
| ■ | ச | ■ | ■ | ■ | பு | வி | ■ |
| கா | ம் | க | ■ | து | ய | ர | ம் |
| ர் | ■ | வி | ம் | ம | ல் | ■ | அ |

## பாராட்டு பெறுவோர்

**இ.றூபிகா**
**மண்டூர்**

# குறுக்கெழுத்துப் போட்டி இல – 10

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | 2 | | 3 |
| | ■ | ■ | ■ | ■ | | ■ | |
| 4 | | | | ■ | | ■ | ■ |
| | ■ | ■ | ■ | 5 | | | 6 |
| | ■ | 7 | | | | ■ | |
| 8 | 9 | | ■ | | ■ | 10 | ■ |
| ■ | 11 | | | ■ | 12 | | 13 |
| 14 | | | ■ | 15 | | ■ | |

## இடமிருந்து வலம்

1. ஒன்றும் தெரியாதவரை இதற்கு ஒப்பிடுவர்.
4. போக்கிரி என்றும் சொல்வர்.
5. வறுமையின் நிறம் இது என்பர்.
7. உறங்கப் பயன்படுவது (குழம்பி).
8. இதை அகற்றுவதே ஒரு போராட்டம் தான் (குழம்பி).
11. இது பிரிக்கும் போது குழப்பமும் ஏற்படும் (குழம்பி).
12. அருள் என்றும் சொல்லலாம்.
14. பிரதியை இவ்வாறு சொல்வர்.
15. கொடியவன்.

## மேலிருந்து கீழ்

1. ஒரு காலத்தில் குழந்தைகளின் விளையாட்டுப் பொருளாக இருந்தது.
2. வாழ்க்கையில் ஆயிரம் இது என்று பாடல் உண்டு.
3. மரங்களில் காணப்படும் (தலைகீழ்).
5. இது அருகிவரும் ஓர் இனம்.
6. அகிலம்.
7. போக்குவரத்துச் சாதனம்
9. வயலின் வரம்பை இப்படியும் சொல்வர் (தலைகீழ்).
10. இரும்பில் இருந்து உருவாகும் சேர்மம் ஒன்று.
12. சிறிய பறவை ஒன்று.
13. களை.

**இதில் காணப்படும் குறுக்கெழுத்துப் போட்டிக்கான உருவமைப்பின் கட்டங்களை வெற்றுத்தாளில் தயாரித்து சரியான விடைகளைப் பூர்த்தி செய்து அதனை புகைப்படம் எடுத்து 2024.11.15 ஆம் திகதி பி.ப.4.15 மணிக்கு முன் 0755424333 எனும் வட்சப் இலக்கத்துக்கு அனுப்பவும். அத்துடன் தங்களது பெயர் முகவரி தொலைபேசி இலக்கம் (மீள்நிரப்ப வேண்டிய தொலைபேசி இலக்கம்) என்பவற்றையும் அனுப்பவும்.**

RELOAD

முதலாம் பரிசு : 200/=
இரண்டாம் பரிசு : 150/=
மூன்றாம் பரிசு : 100/=

# பொது அறிவு

சுவேந்தர் பவித்ரா - விக்னேஸ்வரா சிறுவர் கழகம்




**1. உலகின் முதல் கொரோனா நோயாளி யார்?**

வெய்குவாய்ஜியான் என்ற 57 வயதுடைய பெண்மணி ஆவார்

**2. அமெரிக்க நாட்டின் கோடீஸ்வரர் யார்?**

எலன் மஸ்க்

**3. *BBC* செய்தி நிறுவனம் காணப்படும் நாடு யாது?**

இங்கிலாந்து - லண்டன்

**4.அம்பாறை மாவட்டம் எத்தனை பிரதேச செயலகப் பிரிவுகளைக் கொண்டது?**

20 பிரதேச செயலகங்கள்

**5. இலங்கையின் மிக நீண்ட பாலம் எது?**

கிண்ணியா பாலம் - 396 மீற்றர்

**6. திமிங்கிலத்தின் மூளையின் நிறை யாது?**

7 கிலோகிராம்

**7. மூடர்களைப் பாராட்டுதல் என்ற நூலை எழுதியவர் யார்?**

ரெசிடேரியஸ் இராஸ்மஸ் - ஒல்லாந்து

**8.இலங்கையில் முதல் திறந்தவெளி சிறைச்சாலை எங்கு உள்ளது?**

பல்லேகல

**9.சாரணர் இயக்கத்தின் தந்தை யார்?**

பேடன்பவல்

**10. மணிக்கு *80* கிலோமீற்றர் வேகத்தில் ஓடும் ஆற்றல் கொண்ட மான் இனம் எது?**

இம்பாலா

**11. உலகில் ஆறுகள் இல்லாத நாடு எது?**

சவூதி அரேபியா

**12. *ATM* இயந்திரத்தை முதன் முதலில் உருவாக்கியவர் யார்?**

ஜோன் ஷெப்பர்ட் பேரோன்

**13. உலகப் புகழ்பெற்ற *"The Pond"* எனும் ஓவியத்தை வரைந்த ஆங்கில ஓவியர் யார்?**

L. S. லோரி

**14.இலங்கையின் வணிக தலைநகரம் எது?**

கொழும்பு

**15. "இருண்ட கண்டம்" என அழைக்கப்படும் கண்டம் எது?**

ஆபிரிக்கா

# மாணவர் ஆக்கம்

A.KAJANAN - Saratha Childrens Club, Karaitivu-5



# இன்றைய உலகில் ஆங்கிலக் கல்வியின் அவசியம்

A.SASIKALA - DEVELOPMENT OFFICER, NAVITHANVELI




நவீன காலத்தில் ஆங்கிலக் கல்வியின் இன்றியமையாமை மிக மிக ஆழமாக உணரப்படுகின்றது. இன்று சர்வதேச மொழியாக மதிக்கப்படும் ஆங்கில மொழி கல்வி, நிர்வாக சேவைகளில் பாரியளவு செல்வாக்கு செலுத்துகின்றது. விரும்பியோ விரும்பாமலோ ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற வேண்டிய நிலமை இன்று காணப்படுகின்றது. எல்லா நாடுகளிலும் ஆங்கிலம் ஏதோ ஒருவகையில் கற்பிக்கப்பட்டும் கையாளப்பட்டும் வருகின்றது. சில நாடுகளில் இரண்டாம் மற்றும் மூன்றாம் மொழியாகவும் பேசப்பட்டு வருகின்றது. ஆங்கில மொழியானது இன்றைய உலகில் பொது மொழியாக கொள்ளப்படுகின்றது. இத்தகைய ஆங்கில மொழியை நாம் கற்க வேண்டியதன் அவசியத்தை ஆராய்ந்து பார்ப்பது சாலச் சிறந்தது.

இன்றைய காலகட்டத்தில் அனேகமான பயன்தரும் புத்தகங்கள் ஆங்கில மொழியில் காணப்படுவதனால் அதைப் பற்றிய விடயங்களை அறிந்து கொள்ளவும் ஆங்கில மொழி அவசியமாகின்றது. கண்டுபிடிப்புகள் பற்றிய தகவல்கள் விஞ்ஞான தொழிநுட்ப ரீதியான விடயங்கள் எல்லாம் ஆங்கில மொழியின் ஊடாக இன்று வந்து கொண்டிருக்கின்றன. அது பற்றிய விடயங்களை உடனுக்குடன் அறிந்து கொள்ள ஆங்கில மொழி மிக அவசியமான ஒன்றாகும்.

இன்றைய கல்வி, சவால்களை எதிர்கொள்ளும் மாணவர்களை உருவாக்குவதில் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றது. எனவே நவீன கல்வியில் ஆங்கிலம் ஒரு முக்கிய இடத்தை பிடித்துள்ளது.மாணவர்களின் தொடர்பாடல் திறனை அதிகரிக்கவும் ஒரு ஆணிவேராக ஆங்கிலம் இன்று காணப்படுகின்றது. உள்ளூர் மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் நண்பர்களோடு உரையாடுவதற்கும் முறைசார், முறைசாரா வேலைகளை செவ்வனே செய்து முடிக்கவும் ஒரு மொழி ஊடகமாக ஆங்கிலம் திகழ்கின்றது. இன்று சில உயர் பாடசாலைகளில் ஆங்கில மொழி மூல வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை இதன் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது.

பல்கலை மட்டத்திலும் பட்டபின் படிப்புகளை மேற்கொள்ளவும் ஆங்கில மொழி அவசியமாகின்றது. ஏனெனில் இதனூடாகவே மாணவர்களில் பெரும்பாலானோர் தமது கற்கை நெறியை மேற்கொள்கின்றனர். இதனால் மாணவர்களின் தொடர்பாடல் திறன் அதிகரிப்பது மட்டுமல்லாமல் தலைமைத்துவ பண்புகள், ஆளுமை பண்புகள் இயல்பாகவே வளர்ச்சியடைகின்றன. எனவே ஆங்கில மொழி தற்கால சூழ்நிலையில் மிக அவசியமான தொன்றாகும்.

உலக மயமாக்கல் நிகழும் இக்கால சூழ்நிலையில் பாமரமக்களுக்கும் ஆங்கில அறிவை எடுத்துச் செல்ல வேண்டிய தேவை காணப்படுகின்றது. இதற்கேற்ப நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய தேவையும் உண்டு. எமது நாட்டைப் பொறுத்தவரை தேவையில்லா பிரச்சினை என்று கூறப்படும் வாசகத்திற்கு ஆங்கில மொழி கூட மருந்தாகலாம். மொழி வளர்ச்சி தொடர்பாடல் திறன் அதிகரிக்குமானால் எந்த சூழ்நிலையிலும் நம்பிக்கையோடு நிறுவனங்களிலும் மற்றும் வேலை ஸ்தாபனங்களிலும் வேலை செய்ய மக்கள் முன் வருவர். மேலும் வெளிநாட்டுக்குச் செல்வதன் மூலமும் தரமான வேலைகளை பெற்றுக் கொள்ளலாம். இந்நிலையில் இலங்கை சிறந்த அன்னிய செலவாணியை கூட பெற்றுக்கொள்ள வாய்ப்புள்ளது.

அனேகமான உயர்கற்கை நெறிகள் முகாமைத்துவம், மொழி, விஞ்ஞான, தொழிநுட்பம், கணக்கியல், மருத்துவம், பொறியியல் எனப் பல்வேறு கற்கை நெறிகள் ஆங்கில மொழியின் ஊடாக இடம் பெறுவதனால் இதனை கற்பதன்




மூலம் இலகுவாக வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் உருவாகும். நவீன உலகில் வேலைகளை இலகுவாக்குவதற்காக கண்டறியப்பட்ட மகத்தான கண்டுபிடிப்பு கணினியாகும். இத்தகைய கணினியை கையாள்வதற்கு ஆங்கிலக்கல்வி மிக அவசியமாகும். மேலும் பல இன, மத, மொழி பேசும் மக்கள் செறிந்து வாழும் எமது நாட்டில் ஒரு “பொது மொழி” மிக அவசியமாகும். பொது மொழி கல்வி தேசிய ஒற்றுமைக்கான ஒரு ஊடகமாக திகழ்கின்றது. இந்நுட்ப முறையினூடாக இனங்களுக்கிடையேயான கலாச்சார தடைகளை நீக்கி சிறந்த கலாசார உறவை கட்டியெழுப்பலாம்.

மேலும் பிள்ளைகளிடத்தில் ஆங்கில மொழியை ஊட்டுவதில் பெற்றோர்கள் அக்கறையோடு செயற்பட வேண்டும். சில பெற்றோர்களின் கவனயீனத்தாலும் அக்கறையின்மையாலும் மாணவர்கள் பலர் ஆங்கில மொழியில் விருப்பமின்றி வெறுப்புற்று காணப்படுவதை நமது கண்முன்னே காணக்கூடியதாக உள்ளது. தரமான பயிற்சி பெற்ற ஆசிரியர்களை பாடசாலையில் நியமிப்பது மட்டுமல்லாமல் தெளிவாக கற்பிக்கக்கூடிய வகையில் ஆசிரியர்கள் உருமாற வேண்டும்.

தற்காலத்தில் வாழும் சாதாரண மனிதன் பொது அறிவு நிறைந்தவனாக இருக்க வேண்டும். அந்த வகையில் ஆங்கில பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் சிறந்த பொது அறிவை தருகின்றது. இத்தகைய ஆங்கில மொழியை அலட்சியம் செய்வதை ஆழ்ந்த புலமை உள்ள எந்த கல்விமானும் விரும்பமாட்டான். எந்த வகையில் நோக்கினாலும் முக்கியத்துவம் வாய்ந்த ஆங்கில மொழியை அலட்சியப்படுத்துவதால் பயனேதுமில்லை ஏனென்றால் பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்கள் அனைவரும் தெரிந்திருக்க வேண்டிய பொது மொழி ஆங்கிலம் ஆகும். ஆகவே "ஆங்கிலம் கற்போம் அகிலத்தை வெல்வோம்".

**கடந்த மாத இதழின் தொடர்ச்சி...**

# சுதந்திர கொடுப்பனவு பத்திரம் எனப்படுவது என்ன?

NMM A. Sujan - Colonization Officer



தகவல் மூலம் - ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெசனல் - ஸ்ரீலங்ககா

தங்குமிட நடவடிக்கைக்காக வழங்கப்பட்டுள்ள நீண்டகால குத்தகை உறுதி பத்திரத்திற்கே சுதந்திர கொடுப்பனவு பத்திரம் வழங்கப்படும். வேறு நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட நீண்ட கால குத்தகை உறுதிப் பத்திரத்திற்கு சுதந்திர கொடுப்பனவு பத்திரம் வழங்கப்பட மாட்டாது.

**1.** சில சந்தர்ப்பங்களில் ஜனாதிபதியின் பணிப்பின் பேரில், வேறு தேவைகளுக்கு வழங்கப்பட்ட காணிகளுக்கு சுதந்திர கொடுப்பனவு பத்திரம் வழங்கப்படலாம். எனினும், அவ்வாறான சந்தர்ப்பங்கள் மிக அரிது.

**2.** இந்த சுதந்திர கொடுப்பனவு பத்திரத்தில் எந்தவொரு நிபந்தனைகளும் உள்ளடங்காது. காணியை பெறுபவர் நாட்டின் சட்டங்களுக்கு ஏற்றவாறு காணியை பயன்படுத்த முடியும்.

**3.** இதன் கீழ் காணியின் உரிமையை மாற்றல், பங்கிடல், அடகு வைத்தல் என்பன இயலும்.

**4.** அளவையாளரினால் வழங்கப்பட்ட **'O'** விளக்கப்படம் **(Outright Diagram)** கொடுப்பனவு பத்திரத்தில் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**5.** ஜனாதிபதியின் நகல் கையொப்பம் இடப்பட்டு, சிவப்பு நிறத்தில் அரசாங்க முத்திரை பதிக்கப்பட்டிருக்கும்.

**6.** இந்த கொடுப்பனவு பத்திரத்தினை காணி பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்தல் வேண்டும்.

இதனைத் தவிர அரசாங்கத்தின் காணி வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அல்லது நகர அபிவிருத்தி அதிகார சபை (காணிகளை பொது மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக) சுதந்திர கொடுப்பனவு பத்திரத்தின் ஊடாக உரிமையை கையளிக்க முடியும். அவ்வாறு வழங்கியதன் பின்னர் அந்த நிறுவனங்கள் நொத்தாரிஸ் உறுதிப் பத்திரம் ஊடாக அதன் காணிப் பகுதிகளை பொது மக்களுக்கு வழங்க முடியும்.

### *3.8* பொது நடவடிக்கைகளுக்காக வழங்கப்படும் காணிகளுக்கான ஆவணம் விகாரைகள் / மத நிறுவனங்கள் / பொதுச் சங்கங்கள் அல்லது அமைப்புக்களுக்காக காணி பெறல்.

பல்வேறு பொது நடவடிக்கைகளுக்காக காணி பெற்றுக் கொள்ளும் தேவை உள்ள நிலையில் அதன் பொருட்டு பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் உள்ளன. முதலாவதாக, அதன் பொருட்டு தகுதியான காணிப் பகுதியொன்றை அடையாளம் காண வேண்டும். அதற்கான அமைப்பு அல்லது நிறுவனத்தின் விண்ணப்பத்தினை பிரதேச செயலகம் அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். பிரதேச செயலாளர், குறித்த காணியை நன்றாக பரிசோதனை செய்து, கோரப்பட்டுள்ள காரணத்திற்கு அந்த காணி பொருத்தமானதா என்பதனை அரசாங்கத்தின் காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் அறவிடக் கூடிய குத்தகை தொகையை (சிறியளவிலான குத்தகை தொகை) மாத்திரம் பெற்றுக் கொண்டு நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான அனுமதியை, கௌரவ அமைச்சின் ஊடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்.

### *4.* அனுமதிப் பத்திரம் ஊடாக மற்றும் கொடுப்பனவு பத்திரம் ஊடாக கிடைத்த காணியை அபிவிருத்தி செய்தல்.

அரசாங்கத்தால் கிடைக்கப் பெற்ற காணியை அபிவிருத்தி செய்வது, அதனைப் பெறுபவரால் கட்டாயம் செய்யப்பட வேண்டிய விடயமாகும். அவ்வாறு அபிவிருத்தி செய்யாத விடத்து, அந்த காணிக்கான உரிமத்தை பிரதேச செயலாளர் இரத்துச் செய்யலாம்.

பயிர்ச் செய்கைக்காக வழங்கப்பட்ட இடமாயின், அதில் நிரந்தர பயிர் மற்றும் குறுகிய கால பயிர்களை விதைத்து, அதன் செயற்பாடுகளை சிறப்பாக முன்னெடுக்க வேண்டும். சேற்று நிலமாயின் அவற்றை வளமான நிலமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும். வதிவதற்காக வழங்கப்பட்ட இடமாயின், அதில் வீடு, மலசல கூடம், கிணறு போன்றன நிர்மாணிக்கப்பட்டிருக்க வேண்டும். தொழில் அல்லது வியாபாரத்திற்காக வழங்கப்பட்டிருப்பின், அங்கு தொழில் அல்லது வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும்.

தொடரும்...

# கிராம மக்களின் வாழ்வும் வளமும்

செல்வசிகாமணி (ஓய்வுநிலை அதிபர்)-சென்றல்கேம்ப்



கடந்த மாத இதழின் தொடர்ச்சி...



எமது கிராமத்தில் குடியேற்றக் கிராமங்கள் அல்லாத பழம்பெரும் கிராமங்கள் பல உள்ளன. அங்கு வாழும் மக்கள் மற்றும் அவர்களின் தொழில்கள் தொடர்பாகப் பார்க்கலாம். அன்னமலை, இது பழம் பெரும் கிராமம். இன்று இதனை பழம்பெரும் பதி என்றே கூறவேண்டும். மாடி வீடுகள் பிரபலமான காளி அம்மன் கோயில் என உயர்ந்து நிற்கின்றது இவ்வூர். இதனை சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன் பார்த்தால் இங்கே ஓரிரு கல்வீடுகளும் இடையிடையே மண் குடிசைகளுமே காணப்பட்டன. அத்துடன் இங்கு வாழும் மக்களின் பிரதான தொழில்களில் ஒன்றாகக் காணப்பட்டது களிமண் மட்பாண்டத் தொழிலாகும். அப்போது பல ஊர்களில் இருந்தும் மக்கள் சட்டி பானைகள் வாங்கிச் செல்வதற்காக அன்னமலைக்கு வருவதுண்டு. அந்த அளவிற்கு மட்பாண்டங்களுக்குப் புகழ் பெற்ற இடமாக இந்த அன்னமலை விளங்கியது. ஆனால் அந்தத் தொழில் இல்லாமல் போயுள்ளதோடு தற்போது இங்குள்ள மக்களில் பெரும்பாலானோர் நகை வேலை செய்பவர்களாகவும் நகைக் கடைக்காரர்களாகவும் காணப்படுவதால் அவர்களின் வருமானமும் பன்மடங்கு உயர்வாகக் காணப்படுகின்றது.

அதேபோல் அன்னமலையை அண்டியதாகவுள்ள பழைய கிராமங் களில் ஒன்று குடியிருப்புமுனை. இங்கு வாழ்ந்த மக்களில் முன்பு இருந்தவர்கள் விவசாயத் தொழிலாக சுருட்டுப் புகையிலைத் தொழில் செய்ததாகவும் கூறப்படுகிறது. ஆற்று நீரை மனிதவலுவால் இறைத்து இப் பயிர்ச் செய்கையைச் செய்வதாகவும் இங்கு செய்கை பண்ணப்பட்ட சுருட்டுப் புகையிலையை யாழ்ப்பாண வியாபாரிகள் வந்து விலைக்கு வாங்கிச் சென்றதாகவும் கூறப்படுகிறது. அத்துடன் இக்கிராமம் ஆற்றை அண்டியதாக அமைந்துள்ளதனால் மீன்பிடித் தொழிலுக்கும் இது மிகப்பொருத்தமான இடமென்பதால் இக் கிராம மக்கள் மீன்பிடித் தொழிலையும் பிரதானமான தொழிலா கச் செய்து வருகின்றனர். அக் காலத்தில் வேறு ஊர்களில் இருந்தும் மீன்பிடித் தொழிலைச் செய்வதற்காகவும் பலர் இங்கு வந்து குடியேறியதாகவும் கூறப்படுகின்றது.

இவற்றோடு மாடு வளர்ப்போர்களும் இங்கு குடியமர்ந்து தமது எருமை மாட்டுப் பட்டிகளை வளர்த்து வந்தமையும் குறிப்பிடத்தக்கது. இத் தொழில்களுக்குப் பொருத்தமானதாகவே குடியிருப்பு முனை எனப்படும் இந்த பழம்பெரும் கிராமம் விளங்குகின்றது.

இன்றும் ஆற்று மீன் பிடித்தலுக்குப் பிரசித்தமான இடமாக குடியிருப்பு முனை திகழ்கின்றது. பலர் கூறுவார்கள் பச்சை மீன் வாங்க வேண்டுமானால் குடியிருப்பு முனைக்குச் செல்லுங்கள். விலை குறைவாகவும் வாங்கலாம் என்று, உண்மையும் அதுவே. சிலர் பொழுதுபோக்காகவும் இங்கு வந்து நல்ல மீன் வாங்கிச் சமைத்து சாப்பிட்டுச் செல்வதுண்டு. ஊரும் ஆற்றை அண்மித்துள்ளதனால் சில்லென்ற குளிர்காற்று அத்துடன் ஆற்றில் குளித்து மகிழலாம் என்ற நோக்கில் பலரும் இங்கு வந்து மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழித்துச் செல்வதுண்டு.

இக்கிராமத்திற்கு அண்மையில் உள்ள மற்றுமொரு கிராமமே காரைக்குடா எனும் பழம்பெரும் கிராமமாகும். இக்கிராமமும் குடியிருப்புமுனையைப் போன்று மீன்பிடி விவசாயம் போன்றவற்றிற்குப் பிரசித்தி பெற்றதாகும்.

அடுத்ததாக எமது நாவிதன்வெளிப் பிரதேசத்தின் பழம்பெரும் கிராமங்க ளில் ஒன்றான சொறிக்கல்முனை கிராமத்தை நோக்குவோம். இங்கு வாழும் மக்களில் பெரும்பாலானோர் கிறிஸ்தவர்கள். இங்கு பிரசித்தமான கிறிஸ்தவ தேவாலயமும் உள்ளது. இவ்வூர் மக்களுக்குப் பெரிய அளவில் விவசாய நிலங்கள் இல்லை. குடியிருக் கின்ற வீட்டுவளவு நிலங்கள் மட்டுமே உள்ளன. அதுவும் நீர் வசதியே இல்லாத மேட்டு நிலங்களே இவையாகும்.

உண்மையில் வாழ்க்கைப் போராட்டமே இம்மக்களுக்குத்தான் என்று கூற வேண்டும். ஆனால் இவ்வூர் மக்கள் ஒவ்வொருவரும் தச்சர், மேசன், மாட்டுவண்டித் தொழில் என பல்வேறுபட்ட தொழில்களைச் செய்து தமது ஜீவனோபாயத்தை கொண்டு செல்கின்றனர். இங்கு ஏழைகளே அதிகமாக உள்ளனர்.

இம்மக்களுக்காக ஏதாவது தொழில் பேட்டைகளை அமைத்துக் கொடுத் தால் இவர்களின் வாழ்க்கைத்தரம் மேலும் உயர்வு பெறும் என்பதே பலரின் வேண்டுகோளாகும். மக்கள் ஏழைகள் என்றாலும் கல்வியிலும் விளையாட்டிலும் சிறந்தவர்கள் இங்கு உள்ளனர். இங்கு பெரிய பாடசாலை ஒன்றும் அத்துடன் விளையாட்டுக் கழகங்களும் உள்ளன.

தொடரும்...

# தாய்ப் பாலூட்டல்

சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் - நாவிதன்வெளி.



தாய்ப்பால் குழந்தையின் முதலுணவாகும். இது சிறந்த மற்றும் இயற்கையான ஊட்டச்சத்து, நோய் எதிர்ப்பு சக்தி அடங்கிய ஆரோக்கியமான வளர்ச்சிக்கு அவசியமான ஆதாரம் ஆகும்.

**தாய்ப்பாலூட்டலின் முக்கியத்துவம்**

* தாய்பாலூட்டல் தனது குழந்தைக்காக தாயினால் வழங்கப்படும் அதியுயர் சேவையாகும்.

* தாய்ப்பால் குழந்தைக்காக உற்பத்தியாவதுடன் அதில் முதல் 6 மாதத்திற்கு தேவையான போசாக்கு அடங்கி உள்ளது.

* குழந்தைக்கு தேவையான நீர் தாய்ப்பாலில் காணப்படுவதனால் மேலதிகமாக குழந்தைக்கு தண்ணீர் அல்லது வேறு நீராகாரங்கள் கொடுக்க தேவையில்லை.

* தாய்ப்பால் கொடுத்தல் மிகவும் இலகுவான செயலாகும்.

**எப்போது தாய்ப்பாலூட்ட வேண்டும்?**

குழந்தை பசி வந்துவிட்டதற்கான அறிகுறிகளைக் காண்பித்ததும் அதனை விளங்கிக் கொண்டு தாய்ப் பாலூட்டுதல் வேண்டும். அதாவது ஒரு குறிப்பிட்ட நேர அட்டவணையைப் பின்பற்றாமல் குழந்தை பசிக்கு காண்பிக்கும் அறிகுறிகளை (தலையைத் திருப்புதல், விரல்களைச் சூப்புதல்) இனங்கண்டு தாய்ப்பால் ஊட்டுதல் வேண்டும்.

**பதிலளிக்கக்கூடிய பாலூட்டல் / *Responsive Feeding* முறையின் முக்கிய அம்சங்கள்.**

*01.* பசிக்கான அறிகுறிகளை அடிப் படையாகக் கொண்டு பாலூட்டுதல். பசிக்கான ஆரம்ப அறிகுறிகளை காண்பிக்கும் போதே பாலூட்டுதலை ஆரம்பித்து விட வேண்டும்.

* தாய்ப்பால் பெற மார்பகங்களை நோக்கி தலையை திருப்புதல்.

* கைகள் அல்லது விரல்களைச் சூப்புதல்.

* உதட்டை சவறுதல் ( Lip- Smack- ing ).

* அதிகளவில் ஆரவாரித்தல் அல்லது சகிப்புத் தன்மையை இழத்தல்.

* குழந்தை அழும் வரை காத்திருத்தல் கூடாது.

*02.* முன்னரே நிர்ணயித்த நேர அட்டவணை இன்மை.

நேரத்திற்கு பாலூட்டும் பழக்கத்திற்கு பதிலாக குழந்தைக்கு பசித்தாலோ அல்லது ஆறுதல் தேவைப்படுவதாக உணர்ந்தாலோ தாய்ப்பால் கொடுக்கப் படுகின்றது. இது இரவு பகல் முழுவதும் பலமுறை நிகழலாம்.

*03.* பசிக்காக மட்டுமன்றி குழந்தை மன அமைதி பெறவும், பாதுகாப்பாக உணரவும் அல்லது தூங்க வைப்பதற் காகவும் தாய்ப்பாலூட்டுதல்.

## தாய்ப்பால் மட்டும் கொடுப்பது என்றால் என்ன?

குழந்தை பிறந்தது முதல் 6 மாதங்களுக்கு (180 நாட்கள்) தனியே தாய்ப் பால் மட்டும் கொடுத்தல். நீர் அல்லது வேறு நீராகாரங்கள் தாய்ப்பாலுடன் கொடுக்கக் கூடாது. வைத்தியரின் ஆலோசனைப்படி மட்டுமே தாய்ப் பாலுடன் மருந்து வகைகள் கொடுக்கலாம்.

## தாய்ப்பால் மட்டும் எவ்வளவு காலத்திற்கு கொடுக்க வேண்டும்?

குழந்தை பிறந்து 180 நாட்கள் பூர்த்தியாகும் வரை தனித்தாய்ப்பால் மட்டும் கொடுக்க முடியும். அதற்குப் பின் குழந்தைக்கு 2 வயது பூர்த்தியாகும் வரை மேலதிக உணவுடன் தாய்ப்பால் கொடுக்க முடியும். இதனால் குழந்தையின் உடல் உள வளர்ச்சி சரியாக நடைபெறும்.

## தாய்ப்பால் உற்பத்தியில் தாக்கம் செலுத்தும் காரணிகள் எவை?

குழந்தை தாயின் மார்பை உறிஞ்சும் போது உணர்ச்சித் தூண்டல்கள் மூளைக்குச் செல்கின்றன. மூளையின் அடிப் பாகத்தில் இருக்கும் பிட்டியுடரி சுரப்பி மூலம் ஒக்சிடோசின் சுரக்கின்றது.

தொடரும்...



# சுவையான கொண்டைக்கடலை

## 2 நபர்களுக்குப் பரிமாறக்கூடிய அளவு

**தயாரிக்கும் நேரம்:** 20 நிமிடங்கள்
**சமைக்கும் நேரம்:** 5 நிமிடங்கள்

### தேவையான பொருட்கள்:

1. 1½ கோப்பை ஊறவைத்து, வேக வைக்கப்பட்ட கொண்டைக் கடலை.
2. 1 நறுக்கிய வெள்ளரிக்காய்.
3. ½ நறுக்கிய அல்லது துருவப்பட்ட கேரட்.
4. ½ நறுக்கிய வெங்காயம்.
5. 1 நறுக்கிய தக்காளி.
6. 1 மேசைக்கரண்டி. நறுக்கப்பட்ட கொத்த மல்லித்தழை.

### சுவையூட்ட :

1. 2 தேக்கரண்டி ஆலிவ் எண்ணெய்
2. 2 தேக்கரண்டி எலுமிச்சை சாறு
3. 1 தேக்கரண்டி வறுக்கப்பட்ட எள்
4. ¼ தேக்கரண்டி சர்க்கரை
5. தூவுவதற்கு உப்பு

### செய்யும் முறை :

1. கொண்டைக்கடலை, வெள்ளரிக்காய், கேரட், வெங்காயம், தக்காளி மற்றும் கொத்தமல்லியை கிண்ணத்தில் இடவும்.
2. சுவையூட்டுவதற்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் ஒரு தனி கிண்ணத்தில் இட்டுக் கலக்கவும்.
3. காய்கறிக்கலவையின் மீது சுவையூட்டிப் பொருட்களை சேர்த்து, அதை நன்றாக்கலக்கவும்.
4. பரிமாறவும்.

## புரதம்



# கர்ப்பகால அசாதாரண நிலமைகள் குழந்தையில் உடல், உள, நடத்தைப் பிறழ்வுகளை ஏற்படுத்துமா?

திருமதி.கலாதேவி சந்திரகுமார் - பிரதேச செயலகம், கல்முனை - வடக்கு



ஒரு ஆணும் பெண்ணும் சட்ட ரீதியாகவோ, சம்பிரதாய ரீதியாகவோ திருமணம் செய்த பின்னர் உடலுறவு கொள்வதன் மூலம் உருவாகும் கரு சட்டரீதியான கருவாக கொள்ளப்படும். ஆணின் இருபத்து மூன்று நிற மூர்த்தங்களும் பெண்ணின் இருபத்து மூன்று நிறமூர்த்தங்களும் சேர்வதன் மூலம் கரு உருவாகின்றது. வயிற்றிலி ருக்கும் குழந்தை ஆணா? பெண்ணா? என்பதனை தீர்மானிப்பது ஆணின் 23 சோடி நிறமூர்த்தமாகும். கரு உருவாகியதிலிருந்து பிறக்கும் வரையுள்ள காலப்பேகுதி கர்ப்ப காலமாகும். கரு உருவாகி ஒன்பது மாதங்களின் பின்னர் குழந்தை பிறக்கின்றது. இக் கோலப்பகுதி ஒரு குழந்தையின் வளர்ச்சி, விருத்தி, முதிர்ச்சியில் முக்கியமான அடித்தளமாக அமைகின்றது.

ஒரு பெண்ணிற்கு கர்ப்பகாலம் என்பது மகத்தான, மகிழ்ச்சிகரமான காலப் பகுதியாகும். இவர்களுக்கு சமூகத்தில் தனித்துவமான மதிப்பும், மரியாதையும் உண்டு. ஒவ்வொரு தம்பதியினரும் குழந்தை உருவாவதற்கு முன்னர் தங்களை உடல், உள, பொருளாதார, சமூக ரீதியாக தயார் படுத்திக் கொள்வது கட்டாயமாகும். எத்தனை பிள்ளைகளை பெற்றெடுப் பது இடைவெளி எவ்வளவு காலம், எந்த வைத்தியசாலைக்கு செல்வது, குழ்ந்தையை வளர்த்து எவ்வாறு ஒரு நல்ல நிலைக்கு கொண்டுவருவது போன்ற ஏற்பாடுகளை முன்கூட்டியே திட்டமிட்டுக் கொள்வது சிறப்பான தாகும். ஏனெனில் கர்ப்பகால அசாதாரண நிலமைகள் குழந்தையின் உடல், உள மற்றும் நடத்தைப் பிறழ்வுகளுக்கு வழிவகுத்து விடும். கருவின் விருத்தியில் பரம்பரை பிறழ்வுகளும் தாக்கம் செலுத்தலாம். மற்றும் தாயின் வயதும் முக்கியமான தாகும். மேலை நாடுகளில் ஒரு சிறந்த ஆரோக்கியமான குழந்தையை பெற்றெடுப்பதற்கான வயதெல்லை இருபத்து மூன்று தொடக்கம் முப்பத் தைந்து என வரையறுக்கப்பட்டுள்ளது. இருந்தாலும் நமது நாட்டில் கருவள வீதம் கூடுதலாக இருப்பதனால் இவ் வயதெல்லைக்கு வெளியே குழந்தை பெற்றெடுப்பதற்கான சாத்தியப்பாடு உள்ளதனால் வைத்தியரின் ஆலோச னையை பின்பற்றவும்.

**கர்ப்ப காலத்தில் கருவின் வளர்ச்சி, விருத்தி, முதிர்ச்சிக்கு அவசியமானவை.**

* விற்றமின்கள் (பழங்கள்).
* கனியுப்புக்கள்.
* போதுமானளவு நீர்.
* போஷாக்கான உணவு.
* மன அமைதி, சாந்தம், சந்தோஷம்.
* போதியளவு ஓய்வு.
* நடைப்பயிற்சி.
* ஆரோக்கியமான பொழுதுபோக்கு.

கருக்கட்டல் நடைபெற்ற உடனே மனித கரு உண்டாகி விடும். இக்காலப்பகுதியில் கரு சரியான இடத்தில் இருக்கிறதா? இல்லையா? மற்றும் இதயத்துடிப்பு, மூளைவளர்ச்சி, நரம்பு மண்டலம் விருத்தியடைந்துள்ளதா? என்பதை ஸ்கேன் செய்வதன் மூலம் வைத்திய ரினால் உறுதிப்படுத்திக் கொள்ளலாம். வலது குறைந்ததென கண்டறியப் பட்டால் கருச்சிதைவு செய்வதற்கு சட்ட ரீதியான அனுமதியுண்டு. நான்கு மாதங்களின் பின் மைய நரம்புத்தொகுதி விருத்தியடையும். ஐந்தாம் மாதத்தில் கேட்கும் திறன் விருத்தியடைவதனால் வெளிச்சூழலில் இடம்பெறும் விடயங்களை குழந்தை அவதானித்துக் கொண்டிருக்கும். எனவே குழந்தையின் அகச்சூழலும் புறச்சூழலும் ஆரோக்கியமானதாக அமைதல் வேண்டும்.

முதல் மூன்று மாதங்களும் மிக முக்கியமானதாகும். கருப்பையில் கரு நிலைக்கும் காலம் இதுவாகும். இக் காலப்பகுதியில் சாப்பிட ஆசை இருந்தாலும் வாய் ஒத்துழைக்காது. அடிக்கடி வாந்தி ஏற்படும். அதற்காக சாப்பிடாமல் இருக்காது சிறு இடை வெளி விட்டு இலகுவில் சமிபாடு அடையக்கூடிய பழங்கள், காய்கறிகள், கஞ்சி மற்றும் மனதுக்குப் பிடித்த சத்துள்ள உணவுகளை உட் கொள்ளலாம். மற்றும் தொற்று நோய்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது. ஏனெனில் இக்காலப் பகுதியிலேயே கருகலை வதற்கான சந்தர்ப்பம் கூடுதலாக காணப்படுகின்றது.

**கர்ப்பகாலத்தில் தவிர்க்கப்பட வேண்டியவை.**

* நீண்ட தூர பயணங்களை தவிர்த்தல்.
* சன நெருக்கடியான இடங்களுக்கு செல்வதை தவிர்த்தல்.
* செல்லப்பிராணிகளை தொடுவதை தவிர்த்தல்.
* போதைப்பொருள் பாவிப்பதை தவிர்த்தல்.
* X-RAY எடுப்பதை தவிர்த்தல் (அவசியத்தேவை ஏற்பட்டால் வைத்தியரின் ஆலோசனையை பின்பற்றவும்).
* ஆக்ரோசமான படங்களையோ சம்பவங்களையோ பார்ப்பதை தவிர்த்தல்.
* உள நெருக்கீடு மனச்சோர்வு ஆகாது.
* ஏசுவதோ துன்புறுத்துவதோ கூடாது.
* பாரமான வேலைகள் செய்யக் கூடாது.

தொடரும்...

# டயொக்சின் வாயுவால் ஏற்படும் சுற்றுச் சூழல் தாக்கமும், நோய்களின் உருவாக்கமும்

சி.யோகலிங்கம் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்





காபன், நைதரசன், ஒட்சிசன், குளோரின் மூலக்கூறுகள் அடங்கிய பொருள்கள் திறந்த வெளியில் தகனம் அடைவதன் மூலம் தோன்றும் வாயு வடிவான பொருள்தான் டயொக்சின். பொலிதீன் பிளாஸ்ரிக், எஸ்லோன் குழாய் ஆகியன மற்ற கழிவு குப்பை கூழங்களுடன் திறந்த சூழலில் எரிவடைவது டயொக்சினை உற்பத்தி செய்யும் பிரதான மூலமாக இனங்காணப்பட்டுள்ளது.

சாதாரணமாக நமது வீட்டிலிருந்து கூட பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருட்கள் சேர்க்கப்பட்டு சுற்றாடலுக்கு கொண்டு சேர்க்கப்படுகின்றன. அவ்வாறாயின் சுற்றுச் சூழலுக்கும், மனிதனுக்கும் மிக மிக கேடு விளைவிக்கும் டயொக்சின் இரசாயனப் பொருள் உற்பத்தியாவதற்கு நாங்களும் பங்காளர்களாகின்றோம் என்பதை சில வேளைகளில் அறியாதிருக்கலாம்.

1. நாங்கள் வீட்டுக்கு எடுத்துச் செல்லும் மரக்கறிகளை பொலித்தீன் பை அல்லது பிளாஸ்ரிக் கூடையில் கொண்டு செல்லுதல்.

2. உணவுப் பொருட்கள், பால் மா வகைகள் என்பனவற்றை கொள்வனவு செய்யும்போது பிளாஸ்ரிக் கொள் கலனில் அடைக்கப்பட்டவைகளை கொள்வனவு செய்தல்.

3.வீட்டை அலங்காரமாக வைத்திருப் பதற்காக பயன்படுத்தப்படும் மேசை, நாற்காலிகள், அலங்காரப் பூக்கள் மற்றும் விளையாட்டுப் பொருட்களை பாதுகாப்பாக வைத்திருப்பதற்காக பிளாஸ்ரிக் கொள்கலன்கள், பொலித் தீன்களை பயன்படுத்துதல்.

இவ்வாறு எடுத்துச் செல்லப்படும் பிளாஸ்ரிக் பொருட்கள், பொலித்தீன்கள் உங்களுக்கு தேவைப்படாதவிடத்து,

1.ஏனைய வீட்டு கழிவுப் பொருட்களு டன் சேர்த்து அவைகளை எரித்தல்.

2.பொலித்தீன் பைகளிலிட்டு கழிவுப் பொருட்கள் கொண்டு செல்லும் வாகனத்தில் ஒப்படைத்தல்.

3.தெருவின் இரு மருங்குகளிலும், வெற்று நிலத்தில் குவித்தல்.

இவ்வாறு எமது உடல் நலனுக்கு கேடு விளைவிக்கும் டயொக்சின் எவ்வாறு நமது உடலினுள் செல்லு கின்றது? அதாவது தாய்ப்பால் குழந்தைகளின் முக்கிய உணவாகும். எனினும் தாயின் உடலினுள் டயொக்சின் நுழைந்திருப்பின் தாய்ப்பாலுடன் தானாகவே குழந்தையின் உடலுக்கு இந்தப் பயங்கர இரசாயனப் பொருள் கடத்தப்படும்.

டயொக்சின் வாயு பெரும்பாலும் கொழுப்புச் சத்து அதிகமாகவுள்ள இடங்களில் அகத்துறிஞ்சப்படும். தாய்ப்பாலில் அதிகளவு கொழுப்புச் சத்து அடங்கியுள்ளது. இதன் காரணமாக தாயிடமிருந்து குழந்தை தாய்ப்பாலை உறிஞ்சிக் குடிக்கும் போது குழந்தையின் உடலை டயொக்சின் இலகுவாக அடைந்து விடுகிறது. ஆட்டிறைச்சி, மாட்டிறைச் சியை உட்கொள்ளும் போது டயொக்சின் உடலை அடைய முடியும்.

மேலும் சூழவுள்ள வளிக்கு விடு விக்கப்படும் டயொக்சின் நுண்ணிய தூசு போன்ற துணிக்கைகளுடன் இரண்டறக் கலந்து விடுவதால் பூமியில் படிந்து மண்ணுடனும் நீருடனும் சேர்கின்றது.

முன்னர் குறிப்பிட்டதைப்போல் டயொக்சின் வாயு அதிகளவில் கொழுப்புச்சத்து உள்ள இடங்களினை நோக்கி வேகமாக கடத்தப்படுகிறது. பச்சைப்புல்லில் கொழுப்புச்சத்து அதிகமாக அடங்கியுள்ளது. பிளாஸ் ரிக், பொலித்தீன் போன்றவை ஏனைய குப்பை கூழங்களுடன் சுட்டெரிக்கப் படும்போது காற்று செல்லும் திசையில் டயொக்சின் வாயு பயணித்து புல் நிலங்களில் படிகின்றது.

தொடரும்...



## என்னவளின் - நட்பு

கள்ளம் கொண்டு
பகை படிந்து
உறவாடும் போலியான
தோழமைகளுள்
நானும் விரும்பாத
வட்டத்தில் வீழ்ந்தேன்
பொறாமை உள்ளங்கள்
போலியான முகமூடி
களைந்ததால்
துயரங்கள் என்னைத்
தாக்க
நட்பிலக்கணங்களும்
உடைக்கப்பட்டது..

இருட்டுச்
சிறையில் சிக்கிப்
பறந்து விட்டேன்
வெகு தூரம்
கள்ளமில்லா
உள்ளத்தினை
களவாடியவளின்
மெய் மறந்த
உரையாடலில்
சிறைப்பட்டேன்..

வலிகளும் பகிர்ந்து
கொண்டாள்
என்னவளிடம்
உரிமையாய்
ஆதலால்
தாமதிக்காமல்
நானும் அலசிக்
கொண்டேன்
அவள் - என்னுள்
பூரண நிலவாய்
என்னுயிர் தோழி

யோகராசா கவிதா
அன்னமலை



## පිය සෙනෙහසින් මිලින වූ රෝස කැකුළී

බහ තෝරන විට මගේ මුල්ම වචනය
තාත්තා යී
මව පසු කලෙක මට පැවසුවාය
ඒ වදන කොයිතරම් නම් ආදරණීය ද
ඔබ අත්පුඩි ගසා හාදුවක් දෙන්න
සුදුමැණිකේ කියූ විට
මා ඔබේ ගෙල බදා හාදුවක් දුන්නේ
අපිරිමිත පිය සෙනෙහසිනි
මගේ දකුණතින් අල්ලාගෙන
වීදිය අයිනෙන් අකුරට ගෙන ගියේ
කොයිතරම් නම් දරු සෙනෙහසින්ද
ඔබේ රළු සුළගිල්ල මට මහා ශක්තියක් විය
එදා
මා නවතා ඔබ යන විට මා ඔබ දෙස බලා
සිටියේ
කොයිතරම් නම් පිය සෙනෙහසින් ද
ටිකෙන් ටික මම ලොකු මහත් විය
දැන් මම 7 වසරේය
අග හිගකම් හිස එසවිය මේ දිනවල සැරෙන්
අම්මා එතෙරට ගියේ රන් මසුරන්
සොයන්නට
මා හා ඔබ තනිවිය
කණ කොකා හැඩලීය මූසලකමට මගේ
දිවියට
අම්මා එවූ රන් කාසි වලින් ඔබ ලොල්විය
රහමෙරට
යහළුවන් සමගින්
ඒ අමාවක රාත්‍රියේ දරු සෙනෙහස ඔබට
අමතකවීද
ඔබ මාව කිළිටි කර යහළුවන්ට තෑගි කළ
අයුරු
අද ද මා සිහි කරන්නේ කඳුළු ගඟ දෝර
ගලමිනි
මම අම්මට එන්න කීවත්
ඔබ එය නැවත්තුවේ මන්ද එදා මට
නොතේරුනි
අද මා මහ මඟට බැස
පහන් කණුවක් යට සිටින්නේ
ඔබ මට කියා දුන් පිය සෙනෙහසට වන්දි
ගෙවීමටයි
පිය සෙනෙහස හද පුරා පිරී ඉතිරි යයි අදත්
එහෙත් මතු බුදු වෙන්න පතන්නේ
කොහොමද
ඔබේ පය පා මුල හිස තියා
ආදර මගේ තාත්තේ

M.W.W.DISSANAYAKA



## மனம் விட்டு பேசும் மத்தியஸ்தம்

நிலையான விருத்திக்கு நீதி
அமைச்சு இட்ட வித்து
விருட்சம் போல
வியந்து பார்த்து அயந்து நிற்க
செய்கிறது

நீதிமன்ற காணி வழக்குகள்
நிறைந்து கிடப்பதை
நீதியமைச்சு நித்தமும் கண்டது
நிவர்த்தி செய்ய நினைத்து

பட்டதாரிகள் என்றாலும் பணிக்கு
ஏற்றாப் போல் நடந்திட நினைத்தே
முயற்சிகள் பல செய்து
பயிற்சிகள் பல கொடுத்து
புரட்சிக்கு வித்திட்டு
புன்னகையுடன் கண்சிமிட்டி
நிற்கிறது

காணி மத்தயஸ்தம் கண்டு
நிற்கிறது
கண்ணியம் தவறாத கௌரவத்தை
தீர்வில்லா பிரச்சினை ஏதுமில்லை
மானிடா
தீர்த்து வைத்திட நாம் உண்டு
மானிடா

சமாதானம் பேச கரம்
கொடுக்குமிடம்
சங்கடங்கள் தீர்க்கும் சந்நிதி
சந்தோசம் கொடுக்குமிடம்
சந்ததிகள் மலரும் சங்கதி
பேசுமிடம்

உறவுகள் தழைத்திட
உரம் கொடுக்குமிடம் உணர்வுகள்
மதித்திட மனம் கொடுக்குமிடம்
மந்திர தந்திரங்கள் ஏதுமில்லை
மன சஞ்சலங்கள் தீர்க்குமிடம்

தன்னடக்கமான தலைமைத்துவம்
தளிர்விடும் மத்தியஸ்தம்
பட்டங்கள் பல பெற்றாலும்
பக்குவமாக பயனிக்கும்
மத்தியஸ்தர்கள்

பிணக்குகள் விலக்கு காணுமிடம்
இணக்கங்கள் கண்டு
மகிழுமிடம்
இரு கரங்கள் கை குலுக்கி
குதூகலமடையுமிடம்
நம்பிக்கையுடன் வாருங்கள்
புன்னகையுடன் திரும்புங்கள்

வானத்து மழைக்கு வாடி நிற்கும்
பயிர் போல
சோகங்களை சொர்க்கமாக்கி
சொந்தங்களோடு செல்லலாம்
தாமரைக் குளத்து தவளைகள்
அறிவதில்லை

தாமரைப் பூவின் தேனினை
எங்கிருந்தோ வரும் வண்டுகள்
போல பயணங்களைத் தொடர்ந்து
பயனடையுங்கள்

ஜெனிதா மோகன்
நற்பிட்டிமுனை

# குடிசன வீட்டு வசதிகள் தொகைமதிப்பு...





இத் தொகைமதிப்பானது தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தி னால் மேற்கொள்ளப்படுகின்றது. முதலாவது தொகைமதிப்பானது 1871 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. 10ஆண்டுகளுக்கு ஒருமுறை நடாத் தப்படும் இத் தொகைமதிப்பானது தற்போது இவ்வாண்டு 15ஆவது தொகைமதிப்பாக இலங்கையில் மேற்கொள்ளப்படுகின்றது.

குடிசன வீட்டு வசதிகள் தொகைமதிப்பு என்பது நாட்டிலுள்ள எல்லா நபர்கள் வீடுகள் ஆகியவற்றை ஒரே நேரத்தில் கணக்கெடுப்பதாகும். இது நான்கு கட்டங்களாக நடைமுறைப்படுத்தப் படுகின்றது.

1. கிராம சேவக மட்டத்தில் வரை படங்கள் தயாரித்தல்.
2. நிரல்படுத்தல்.
3. கணக்கெடுத்தல்.
4. தகவல்களை வெளியிடுதல்.

**தொகைமதிப்பின் முக்கியத்துவமும் பயன்களும்.**

* நாட்டுக்குரிய கொள்கைகளை வகுத்தல், திட்டமிடல், அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கான தகவல்களை வழங்குதல்.

* அபிவிருத்தி கருத்திட்டங்களை இவ்வாறு பெறப்படும் தரவுகளை அடிப்படையாக கொண்டு மதிப்பீடு செய்தல்.

* ஆராய்ச்சியாளர்களுக்கு/விஞ்ஞானி களுக்கு/அறிஞர்களுக்கு/ பல்கலைக் கழக மாணவர்களுக்கு தேவையான தரவுகளை வழங்குதல்.

மேலும் இத்தொகைமதிப்பு நடவடிக் கைகளுக்காக கிராம சேவக மட்டத்தில் கணக்கெடுப்பாளர்கள் நியமிக்கப்பட்டு (கிராம சேவக உத்தி யோகத்தர்கள், பொருளாதார அபி விருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்) சகல கள நடவடிக்கைகளும் செவ் வனே நிறைவேற்றப்படுகின்றன. இவர் களுக்கு ஆலோசனை, அறிவுரைகளை பிரதேச செயலாளர், உதவி பிரதேச செயலாளர், தொகைமதிப்பு புள்ளி விபரத் திணைக்கள உத்தியோகத்தர் கள் வழங்குகின்றனர்.

தொகைமதிப்பில் சேகரிக்கப்படும் தகவல்கள் இரகசியத்தன்மையானவை யாகும். தனிப்பட்ட தகவல்கள் எந்தவொரு காரணத்திற்காகவும் வெளிப்படுத்தப்படலாகாது. மேலும் தொகைமதிப்பு கட்டளைச் சட்டத்தின் படி சகல நபர்களும் தொகைமதிப்பில் கேட்கப்படும் வினாக்களுக்கு சரியான தகவல்களை வழங்குவது கட்டாயமான தாகும். தகவல்களை வழங்க மறுத்தல், ஆட்சேபித்தல் தண்டனைக்குரிய குற்றமாகவும் கருதப்படுகின்றது.

இதுவரை காலமும் மேற்கொள்ளப் பட்டு வந்த தொகைமதிப்பு கணக் கெடுப்பானது அச்சிடப்பட்ட விண்ணப்ப படிவங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்தன. ஆனால் இம்முறை மேற்கொள்ளப்படும் கணக் கெடுப்பானது தகவல் தொழில் நுட்பத்தின் ஊடே (இலத்திரனியல் ஊடகம் வாயிலாக Tablet PC, Smart Phone) மேற்கொள்ளப்படுவது சிறப்பம்சமாகும். இதன் மூலம் தகவல்களை விரைவாகவும் துல்லிய மாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவை பொறுத்த மட்டில் 20 கிராம சேவகப் பிரிவுகளில் 93 தொகைமதிப்பு கண்டங்களில் இக் கணக்கெடுப்பானது மேற்கொள்ளப்படுகின்றது.

இக் கணக்கெடுப்பினை மேற்கொள்வ தற்கான செயலமர்வுகள் கணக்கெடுப் பாளர்களுக்கு திணைக்கள வளவாளர் கள் மூலமாக நடாத்தப்பட்டது. மேலும் அரச பணியான இத் தொகைமதிப்பு வேலைகளை அனைவரும் சிறந்த முறையில் செய்து முடிப்பதற்கு உறுதுணை வழங்க வேண்டும் என்று பிரதேச செயலகம் சார்பாக புள்ளிவிபர உத்தியோகத்தர் வலியுறுத்தியுள்ளார்.

**இத்தொகைமதிப்பில் பங்குபற்றுவோர்:**

1. பிரதேச செயலாளர் - உதவி தொகைமதிப்பு ஆணையாளர்.

2. உதவி பிரதேச செயலாளர் - உதவி தொகைமதிப்பு ஆணையாளர்.

3. புள்ளி விபர உத்தியோகத்தர்- பிரதேச தொகைமதிப்பு உத்தியோகத்தர்.

4. கணக்கெடுப்பாளர்களாக - கிராம சேவை உத்தியோகத்தர்கள், பொருளா தார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.

5. மேற்பார்வை உத்தியோகத்தர்- அபிவிருத்தி ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்.

6. Tablet Technical Officer - தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர்.

- மு. வரதராசன்
பிரதேச செயலகம், நாவிதன்வெளி

# குறும்படக் கலைஞர் ருவுதரனுடனான சந்திப்பு

ஏ.எல்.எம்.ஷினாஸ், கே.நீலேந்திரன்



ஆரம்ப காலத்தில் குறும்படங்களில் இணைந்து வேலை செய்வதற்கும் நடிப்பதற்கும் கலைஞர்களை அடையாளங்கண்டு கொள்வதில் பல்வேறு சிரமங்கள் இருந்தது. ஆனால் இன்று நாவிதன்வெளிப் பிரதேசத்தில் பல்வேறு கிராமங்களில் குறும்படக் கலைஞர்கள் உருவாகியிருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது.

நாவிதன்வெளி அன்னமலை - 1ல் வசித்து வரும் குறுந்திரைப்பட கலைஞர் சந்திரபிள்ளை ருவுதரனை நாவெளி சஞ்சிகையின் படலையைத் தேடி பகுதிக்காக சந்திக்க கிடைத்தது. இதன்போது குறுந்திரைப்பட கலை தொடர்பில் கலைஞர் ருவுதரன் பல்வேறு விடயங்களை எம்மோடு பகிர்ந்து கொள்கிறார்.

**முதலில் உங்களை பற்றி கூறுங்கள்.**

நான் 1994ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 06ஆம் திகதி நாவிதன்வெளி அன்னமலை - 1ல் பிறந்து அங்கேயே தற்போது வசித்து வருகிறேன். எனது முழு பெயர் சந்திரபிள்ளை ருவுதரன். சமூகப் பணி இளமானி பட்டத்தினை பூர்த்தி செய்துள்ளேன். கலைத் துறையில் கடந்த 10 வருடங்களாக பணியாற்றி வருகின்றேன். எனக்கு குறுந் திரைப்படம், நாடகம், ஆக்க இலக்கிய படைப்பு, திரைப்படம் போன்றவற்றில் அதிக ஈடுபாடுகள் உள்ளன. ப்ரோக்கன் ட்ரீம், காகிதப் பட்டம், மீசை, நம்ம ஸ்ரீலங்கா Altering jesson, Rise by Lifting, பேருந்து, பசுமை காதல், Jaffna to Colombo போன்ற படைப்புகளை வெளியீடு செய்து உள்ளேன்.

**குறுந்திரைப்பட கலை தொடர்பில் நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்.**

கலைகள் பேரன்பானது. கலைகள் எண்ணங்களின் கலவை, கலைகள் ஆற்றலின் ஆன்மா இதுபோல் எத்தனையோ சொற்றொடர்களில் விளக்கிக் கொண்டே போகலாம். குறிப்பாக கலைகளில் குறும் படத்துறைக்கு தனித்துவமான இடமே உள்ளது. குறும்படம் என்ற வார்த்தை அடிக்கடி நாம் சமூக வலைத் தளங்களிலும் கலைசார்ந்த இடங்களிலும் கேள்விப்பட்டுக் கொண்டிருக்கும் ஒன்றாகும். இது ஒரு கலை என்பதை தாண்டி தனிமனித மற்றும் சமூகத்தின் பிரச்சினைகள், உணர்வுகள், எண்ணங்கள் என்பவற்றை வெளிப்படுத்தும் ஒரு கருவியாக காணப்படுகின்றது.

நாம் இன்றைய வேலைப்பளுமிக்க நவீன காலத்தில் குறுகிய நேரத்திலாவது கலையை ரசிப்பதற்கே விரும்புகிறோம். அதனால் தான் இன்றைய காலகட்டத்தில் குறும் படங்களின் வளர்ச்சியும் பேரூற்றாக உள்ளது. பொதுவாக ஒரு குறும்படம் 40 நிமிடம் அல்லது அதற்கு குறைவான நேரத்தைக் கொண்டிருக்கும். உலக சினிமாவில் முதலாவது குறும்படம் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த லோயிஸ் லீ பிரின்ஸ் என்பவரால் வெறுமனே 2.11 செக்கன்களில் காட்சிப்படுத்தப் 



பட்டுள்ளது. இதுவே முதல் குறும் படமாகவும் முதல் தொழில்நுட்பப் படமாகவும் இடம்பெற்றுள்ளது. அதன் பின்னர் பல்வேறுபட்ட தொழிநுட்ப பரிமாணங்களால் தமிழ் சினிமாவும் தனித்துவமான அடையாளத்தைப் பெற்றுள்ளது.

**குறும்படத் துறையில் கிழக்கு மாகாண இளங்கலைஞர் விருதினை பெற்றுக் கொண்ட நீங்கள் கிழக்கு மாகாணத்திலும் நமது பிராந்தியத்திலும் குறும்பட துறையின் செல்வாக்கு எப்படி இருக்கிறது என எண்ணுகின்றீர்கள்?**

இந்திய சினிமாவினை ஆட்சி செய்த பாலுமகேந்திராவைக் கொண்ட கிழக்கு மண்ணில் திரைப்படக் கலைக்கு பஞ்சமென்றால் கவலைதான். இருந்த போதிலும் இன்றைய இளைஞர்களின் ஆற்றலால் சற்று வளர்ச்சி கண்டு வருகின்றது. இதில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் உள்ள பாரம்பரிய வரலாறு மிக்க நாவிதன் வெளிப் பிரதேசத்தில் குறும்படத்துறை வேரூன்ற ஆரம்பித்திருக்கின்றது. (அதில் நானும் ஒருவனாக இருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது.) குறிப்பாக 2016ல் இருந்து நான் என்னுடைய குறும்படங்கள் உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு இன்று வரை 10இற்கு மேற்பட்ட குறும்படங்கள் 02 ஆவணப்படங்கள் வரை செய்து இருக்கிறேன். அதே போன்று 03 தேசிய ரீதியிலான விருதுகளையும் பெற்றுள்ளேன்.

நடிப்பதற்கும் கலைஞர்களை தேடுவதிலும் பல்வேறு சிரமங்கள் இருந்தது. ஆனால் இன்றைய நாவிதன்வெளிப் பிரதேசத்தில் பல்வேறு கிராமங்களிலும் குறும்படக் கஞைர்கள் உருவாகியிருப்பது

மகிழ்ச்சியளிக்கின்றது. அதிலும் நமது பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்கள் இந்தக்கலை துறையை அதிகம் நேசிக்கின்ற ஒருவராக பார்க்கிறேன். அண்மையில் அவருடைய பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் இன்னும் சில பாத்திரங்களை கொண்டு போதை பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு குறுந் திரைப் படமாக "தவறினில்" என்ற காத்திரமான குறுந்திரைப்படம் ஒன்றை வெளியிலே கொண்டு வந்திருந்தார்கள். இது உண்மையில் நாவிதன்வெளி பிரதேசத்தின் குறும் பட கலைத்துறையை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. தொடர்ச்சியாக குறும்படக் கலைஞர்கள் அதிகரிக்கின்ற சந்தர்ப்பத்தில் எமது நாவிதன்வெளிப் பிரதேசத்தின் தனித்துவ படைப்புக்கள் பலவற்றை தொடர்ந்து உருவாக்கக் கூடிய சூழலை ஏற்படுத்தலாம்.

**குறும்படக் கலை சமூக மட்டத்தில் மாற்றங்களை அல்லது தாக்கத்தினை ஏற்படுத்துமா?**

இன்றைய நாட்களில் தகவல்களையும், பிரச்சினைகளையும், அதற்கான தீர்வுகளையும் எழுத்து மூலமாக ஏற்பதை விட வீடியோ மூலமாக ஏற்றுக் கொள்வதில் மக்கள் அதீத ஆர்வம் காட்டுகின்றனர். இதற்கு குறும்படத்துறை ஒரு பாலமாக இருக்கின்றது.

சமூகம் சார்ந்து பேசக்கூடிய குறும் படங்கள் புரட்சிக்கான ஆயுதங்கள் என சிங்கள இயக்குனர் பிரசன்ன விதானகே தன்னுடைய நூலில் குறிப்பிட்டுள்ளார். கலைகள் ரசிப்பதையும் தாண்டி சமூகத்தை சிந்திக்கவும் வைக்கக் கூடியது.

இயக்குனர், ஒளிப்பதிவாளர், படத் தொகுப்பாளர், இசையமைப்பாளர், நடிகர்கள் இது போன்ற எத்தனையோ கலை ஆர்வலர்களின் எண்ணங்கள் சேர்ந்ததே ஒரு குறும்படம். இவர்கள் அனைவரும் இணைந்தால் ஒரு நிமிடத்தில் தங்களுடைய படைப்பால் சமூகத்தில் குறித்தளவு மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்றால் மறுப்பதற்கில்லை.

**நாவிதன்வெளி பிரதேசத்தில் குறும்பட துறையின் ஆர்வம் எப்படி இருக்கிறது?**

தம்மிடம் உள்ள கலையை வெளிப் படுத்த வேண்டும் என்பதைத் தாண்டி அதை உணர்வு பூர்வமானதாக வழங்க வேண்டும். நாவிதன்வெளிப் பிரதேசத்தைப் பொறுத்தவரை பலர் குறும்படத்தறையில் ஆர்வமாக உள்ளனர். ஆனால் அதை வெளிப் படுத்துவதில் தயக்கம் காட்டுகின்றனர். ஏனெனில் கல்வி, தொழில் என்று வேறு வழிகளில் சென்று கொண்டிருப் பதால் குறும்படத் துறையில் பயணிக்க முடியுமா? என்றும் சிலர் சிந்திக்கின்றனர்.

சிலருக்கு குறும்படத்துறை தொழில் வான்மையாகவும் அதேநேரம் விருப் பமாகவும் இருக்கும். ஆனால் வேறு தொழில்வாண்மையாளர்கள் கூட தங்களுடைய விருப்பத்தினாலும் ஆர்வத்தினாலும் தங்களுக்கு கிடைக் கின்ற நேரங்களில் குறும்படங்களை தயாரிக்கின்றனர். எங்களுக்கு ஒன்றின் மீதான படைப்பாற்றல் இருக்குமாக இருந்தால் அதை எங்கிருந்தும் வெளிப்படுத்த முடியும்.

தவறுகள் தொடர்பாக அஞ்சுவதும் தவறுகள் மீதான கற்றலின்மையும் தொடர்ந்து பலரை குறும்படத்துறை யிலிருந்து இல்லாமல் செய்துள்ளது. இன்று நாம் திரைப்படக் கல்லூரி களுக்கு சென்றுதான் சினிமாவைக் கற்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. இன்று எத்தனையோ சினிமாக் கற்றல் மூலங்கள் வலைத்தளத்தினூடாக உள்ளன. அதனைப் பயன்படுத்தியே நானும் என்னுடைய குறும்படக் கற்றலை விருத்தி செய்து கொண்டேன்.

**குறும்படக் கலைத்துறையில் உங்களுக்கு எப்படி ஆர்வம் ஏற்பட்டது?**

உண்மையில் எனக்கும் குறும்படத் துறைக்கும் எவ்வித தொடர்பும் ஆரம்பத்தில் இல்லை. நான் உயர்தரத்தில் சினிமா சார்ந்த பாடங்கள் கற்கவில்லை. பல்கலைக்கழகத்தில் கூட சமூகப் பணி சார்ந்த பட்டமே முடித்தேன். ஆனால் சுய கற்றலும், குறும்படத்துறை மீதான ஆர்வமும் ஒவ்வொரு படைப்புக்களை மேற் கொள்ளும் போது விடுகின்ற வழுக்கள் மீதான கவனமும் இன்று என்னையும் ஒரு இளம் குறும்பட இயக்குனராக மாற்றியிருக்கின்றது. நான் பல இடங்களில் சமூகப்பணி கல்வியின் பல்வேறு அணுகு முறைகளை திரைப்படங்கள் மூலமாகவும் வெளிப் படுத்துவதற்கான ஓர் வாய்ப்பாக பயன்படுத்தியுள்ளேன். நான் மட்டு மல்ல பல இளம் குறும்பட ஆர்வலர் கள் நாவிதன்வெளி பிரதேசத்தில் உள்ளனர். நமது கலைகளை நாம் ரசிப்பதுதான் தொடர்ந்து எம்மைப் போன்ற கலைஞர்களை ஊக்கப்படுத்துகிறது.

குறுகிய நேரம் ஒதுக்குவோம் எமது பிரதேச குறும்படங்களையும் ரசிப்பதற்கு.

நன்றி...

